அலகு 15

# இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்

## கற்றலின் நோக்கங்கள்

P2W9C4

கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாகிக் கொள்வது

- இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இருதுருவ உலகம் தோன்றுதல்
- போருக்குப் பின்னர் அமெரிக்காவின் நிதியளிப்பில் ஐரோப்பா புனரமைக்கப்படுதலும் பனிப்போரின் தொடக்கமும்
- கருத்தியல் அடிப்படையில் இரு வேறுபட்ட முகாம்கள் உருவாவதற்கு இட்டுச்சென்ற இராணுவ உடன்படிக்கைகள். அமெரிக்க ஐக்கிய நாடுகள் தலைமையேற்ற நேட்டோ, சோவியத் ரஷ்யாவின் தலைமையிலான வார்சா ஒப்பந்த நாடுகள்
- மூன்றாம் உலக நாடுகளும் அணிசேரா இயக்கமும்
- ஐ.நா சபையும் உலகப் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் அதன் பங்கும்
- ஐரோப்பிய யூனியன் உருவாக்கப்படுதலும் ஒருங்கிணைக்கப்படுதலும்
- சோவித் யூனியனின் வீழ்ச்சியும் பனிப்போரின் முடிவும்

## அறிமுகம்

இரண்டாம் உலகப் போரானது (1939 – 1945) நேச நாடுகளுக்கும் அச்சு நாடுகளுக்குமிடையே நடைபெற்றது. இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் நேசநாடுகள் எனும் முகாமை அமைத்தன. 1941இல் பேர்ல் துறைமுகம் (Pearl Harbour) தாக்கப்பட்ட பின்னர் அமெரிக்காவும் இவ்வணியில் இணைந்தது. ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகியவை அச்சு நாடுகளாகும். நேசநாடுகளிடையே கருத்தியல் அடிப்படையிலான வேறுபாடுகள் நிலவியபோதும் ஜெர்மனியின் பாசிசமும் அந்நிய நாடுகளுடன் போர் செய்வதில் அது கொண்டிருந்த தணியாத தாகமும் அவைகளை இணைந்து பணியாற்றக் கட்டாயப்படுத்தின. சோவியத் யூனியன் கம்யூனிச நாடாக இருந்தமையால் அதனோடு இணைந்து செயல்படுவதில் அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் சிரமங்கள் இருந்தன.

இரண்டாவது உலகப்போரின் இறுதியில் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் வல்லரசுகளாக உருவாயின. கருத்தியல் ரீதியிலான செல்வாக்கைப் பெறுவதற்கு இரு நாடுகளுமே முயற்சித்தால் இவ்விரு நாடுகளும் பரஸ்பர சந்தேகமும் நம்பிக்கையின்மையும் கொண்டிருந்தன. இரு நாடுகளும் தங்கள் கருத்தியலைக் கட்டாயப்படுத்தியோ அல்லது ஆர்வமூட்டி தன்வசப்படுத்துதல் மூலமாகவோ பரப்ப முயன்றன. புதிதாக உருவாகியிருந்த இருதுருவ உலகில் பெரும்பாலான நாடுகள் அமெரிக்காவுடனோ அல்லது சோவியத் ரஷ்யாவுடனோ அணி சேர்ந்தாக வேண்டியநிலை ஏற்பட்டது. இந்தியா உட்பட பல ஆசிய–ஆப்பிரிக்க நாடுகள் எந்த அணியிலும் சேராதிருக்கவே விரும்பின. இவ்வாறான நாடுகள் ஒன்றிணைந்து அணிசேரா இயக்கத்தை உருவாக்கின. (Non Alignment Movement – NAM)

முதல் உலகப் போரைக் காட்டிலும் இரண்டாம் உலகப்போர் மிக அதிகமான அழிவையும் புலப்பெயர்ச்சியையும் ஏற்படுத்தியது. ஆகவே உலகத் தலைவர்கள் எதிர்காலத்தில் இதுபோன்ற ஒரு போர் ஏற்படா வண்ணம் தடுப்பதற்கு உலக அளவில் ஒரு அமைப்பு இருக்க வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தனர். இதன் விளைவாக 1945இல் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. உறுப்பு நாடுகளிடையே ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் ஐக்கிய நாடுகள் சபை தனது



12th_History_TM_Unit_15_V2.indd 280 2/4/2020 11:15:01 AM

பங்கினையாற்றி வருகிறது. ஆனால் பனிப்போர் சூழ்நிலை ஐக்கிய நாடுகள் சபையை சுதந்திரமாகவும் வெற்றிகரமாகவும் செயல்படவிடாமல் தடுத்தது. இரண்டாம் உலகப்போர் ஐரோப்பியப் பொருளாதாரத்தை பாழ்படுத்தியதோடு மேற்கு ஐரோப்பாவின் பல நகரங்களை பேரழிவுக்கு உள்ளாக்கியது. தொடக்கத்தில், சிதைந்துபோன பொருளாதாரத்தை புனரமைப்பதற்காக ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைய வேண்டியது அவசியமானது. இதுவே நாளடைவில் ஒரு வலுவான கூட்டு ஏற்படுவதற்கு வழிகோலியது.

இப்பாடத்தில் இரண்டு அதிகாரக் குழுக்கள் உருவானது தங்களது செல்வாக்கு மண்டலத்தை விரிவடையச் செய்ய அவைகள் மேற்கொண்ட தந்திரங்கள், அணிசேரா இயக்கத்தின் தோற்றம், பிரச்சனைகளை தீர்ப்பதில் ஐ.நா. சபையின் பங்கு, போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகளும் ஐரோப்பிய ஒன்றியம் உருவாக்கப்படுதல் மற்றும் இறுதியாக சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பனிப்போர் முடிவுக்கு வந்தது ஆகியவை விவாதிக்கப்பட்டுள்ளன.

## 15.1 ஐரோப்பாவில் போருக்குப் பிந்தைய நிலைமைகள்

முதல் உலகப் போரைக் காட்டிலும் இரண்டாவது உலகப்போர் பேரழிவு மிக்கதாக இருந்தது. 60 மில்லியன் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். திட்டமிடப்பட்ட இன அழிப்பில் நாஜிகள் 6 மில்லியன் ஐரோப்பிய யூதர்களைக் கொன்றனர். மில்லியன் கணக்கான மக்கள் வீடற்றவர்களாகவும் அகதிகளாகவும் ஆக்கப்பட்டனர். இப்போர் விவசாய நிலங்களையும் தொழிற்சாலைகளையும் அழித்தது. வார்சா, கீவ், டோக்கியோ மற்றும் பெர்லின் போன்ற மாபெரும் நகரங்கள் முற்றிலும் பாழாயின. போருக்கு முன்னர் பன்னாட்டு அரசியல் அரங்கில் செல்வாக்குடன் உலா வந்த இங்கிலாந்தும் பிரான்சும் நிலைகுலைந்தன. போருக்குப் பிந்தைய ஐரோப்பாவின் நிலை உணவு மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறையுடன் கவலைக்கிடமானதாக இருந்தது. வேலையின்மை விகிதங்கள் அதிகரித்தன.

போருக்குப் பிந்தைய, உற்பத்திப்பொருட்கள் தொடர்பாக நிலவிய சூழல் முதலாளித்துவ நாடுகளின் தடையற்ற வணிகக் கொள்கைக்குச் சவாலாக அமைந்தது. பல ஐரோப்பிய நாடுகள் தங்கள் மக்களின் நலன்களை மேம்படுத்துவது எனும் உறுதிப்பாட்டுடன் சமூக நல அரசுகளாக மாறின. ஆளுகின்ற அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மனநிறைவு பெறாத துயருற்ற மக்கள் சோசலிச இயக்கங்களை ஆதரிக்கத் தலைப்பட்டனர். குறிப்பாக கம்யூனிச இயக்கம் செயல்துடிப்புடன் விளங்கிய கிரீஸ், துருக்கி ஆகிய நாடுகளில் நிலைமை அவ்வாறுதான் இருந்தது. இடதுசாரி சார்புகொண்ட இயக்கங்களையும், கட்சிகளையும் சோவியத் யூனியன் ஆதரித்தது. 1948 காலப்பகுதியில் கிழக்கு ஐரோப்பாவில் குறிப்பாக ருமேனியா, பல்கேரியா மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளில் சோவியத் ரஷ்யா இடதுசாரி அரசுகளை நிறுவியது. யுகோஸ்லோவியாவில் நடத்தப்பட்ட தேர்தலில் ஏற்கனவே டிட்டோவின் தலைமையில் ஒரு கம்யூனிச அரசு உருவாகியிருந்தது. கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் வலிமையடைந்ததால் மேற்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனின் செல்வாக்கில் இருந்த கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றிவிடுமோ எனும் அச்சத்தினால் அமெரிக்காவும் இங்கிலாந்தும் கவலை கொண்டன.

### இரு–துருவ உலகம் உருவாதல்

ஜெர்மனியின் தோல்வியைத் தொடர்ந்து, 1945 ஜூலையில், ஜெர்மனியின் எதிர்காலம் குறித்து விவாதிப்பதற்காக முதலில் ஸ்டாலின், ட்ரூமன் மற்றும் சர்ச்சில் ஆகியோரும் பின்னர் சர்ச்சிலுக்குப் பதிலாக கிளமென்ட் அட்லியும் பெர்லினுக்கு அருகேயுள்ள போட்ஸ்டாம் எனுமிடத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பின் போது ட்ரூமன் சர்ச்சிலிடம் அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்டதைப் பற்றி கூறினார். இச்சந்திப்பு நடந்த சில நாட்கள் கழித்து ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி ஆகியவற்றின் மீது அணுகுண்டுகளை அமெரிக்கா வீசியது. ஜப்பானியப் பேரரசர் ஹிரோஹிட்டோ தனது நிபந்தனையற்ற சரணடைதலை அறிவித்தார். சோவியத் ரஷ்யாவிடம் தகவல் தெரிவிக்காமலே இக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டதால் இந்நடவடிக்கை இருநாடுகளுக்கிடையிலான அரசியல் விவேக நடவடிக்கைகளில் வெற்றிடத்தை ஏற்படுத்தியது. 1949இல் சோவியத் ரஷ்யா அணுகுண்டை தயாரித்துவிட்டது.

இதுசமயம், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதியம் (International Monetary Fund–IMF) ஆகியவற்றை உருவாக்குவது தொடர்பாக அமெரிக்காவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் இடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தன. 1946 பிப்ரவரி 22இல் மாஸ்கோவில் இருந்தவரும் அமெரிக்க



ஜார்ஜ் கென்னன்



12th_History_TM_Unit_15_V2.indd 281 2/4/2020 11:15:01 AM

விவகாரங்களுக்குப் பொறுப்பு வகித்தவருமான ஜார்ஜ் கென்னன் அமெரிக்க அரசாங்கத்திற்கு 8,000 வார்த்தைகள் கொண்ட தந்தியொன்றை அனுப்பினார். 'நீண்ட தந்தி' என்றறியப்பட்ட இத்தந்தியில் அவர் முதலாளித்துவ உலகத்துடன் நீண்டகால, அமைதியான சமாதான சகவாழ்வை மேற்கொள்ளும் வாய்ப்பை சோவியத் யூனியன் பார்க்கவில்லை என உறுதியாகக் கூறி, உலக நாடுகளில் கம்யூனிசம் "விரிவாக்கத்தை கட்டுப்படுத்துவது" சிறந்த உத்தியாக இருக்கமுடியும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

1946 மார்ச் மாதத்தில் அமெரிக்காவின் மிசௌரி மாநிலத்தில் ஃபுல்டன் எனுமிடத்தில் உரை நிகழ்த்துவதற்காக அழைக்கப்பட்டிருந்த சர்ச்சில், சோவியத் யூனியன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிச அரசுகளை நிறுவிய செயல்பாடுகளைக் கண்டனம் செய்தார். அவர் "பால்டிக்கிலுள்ள ஸ்டெடின் முதல் ஏட்ரியாட்டிக்கிலுள்ள டிரஸ்டி வரை இரும்புத் திரையொன்று போடப்பட்டுவிட்டது" என அறிவித்தார். கம்யூனிசத்திற்கு எதிராக உறுதியாக நிற்கின்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளைக் கொண்ட கூட்டணியொன்றிற்கு அழைப்பு விடுத்தார். சர்ச்சில் ஆற்றிய உரை பனிப்போருக்கான சைகையாகக் கருதப்படுகிறது. சர்ச்சிலை 'போர்விரும்பி' என ஸ்டாலின் விமர்சனம் செய்தார். சர்ச்சிலின் இரும்புத்திரை பேச்சிற்குப் பின்னர் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மீதான சோவியத் யூனியனின் பிடி மேலும் இறுகியது. 1947இன் இறுதிக்குள் செக்கோஸ்லோவாக்கியா தவிர ஏனைய பகுதிகள் அனைத்தும் கம்யூனிச ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன.



ஃபுல்டனில் சர்ச்சில்

### பெர்லின் முற்றுகையும் கிழக்கு ஜெர்மனி மற்றும் மேற்கு ஜெர்மனி உருவாதலும்

யால்டா மற்றும் போட்ஸ்டாம் மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி பெர்லினைத் தலைநகராகக் கொண்ட ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை அமெரிக்க மண்டலம், இங்கிலாந்து மண்டலம், பிரெஞ்சு மண்டலம் மற்றும் சோவியத் ரஷ்யா மண்டலம் என்பனவாகும். 1948இன் தொடக்கத்தில் மூன்று மேற்கு மண்டலங்களும் ஒருங்கிணைக்கப்பட்டது. மார்ஷல் திட்டத்தின் காரணமாக அப்பகுதி வேகமாக முன்னேறி மேம்பாடடைந்தது. இதற்கு பதில்நடவடிக்கையாக மேற்கு பெர்லினுக்கும் மேற்கு ஜெர்மானியப் பகுதிகளுக்கும் இடையிலான தொடர்புகள் சோவியத் ரஷ்யாவை நெருக்கடிக்கு உள்ளாக்கியது. 1948 ஜூனில் மேற்கு பெர்லினுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் இடையிலான அனைத்து சாலை, ரயில் போக்குவரத்துகளை சோவியத் யூனியன் துண்டித்தது. பெர்லினுடன் வான்வழியாகத் தொடர்புகொள்வது என மேலைநாடுகள் முடிவுசெய்தன. பேரளவிலான பொருட்செலவில் 11 மாதங்களாக மேற்கு பெர்லினுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் விமானங்கள் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டன. 1949 மே மாதத்தில் சோவியத் ரஷ்யா நிலவழித் தொடர்புகள் மீதான தடையை நீக்கியது. அதன்பின் பிரச்சனையும் தீர்ந்தது. மேற்கத்திய சக்திகள் அதுசமயம் ஒருபடி மேலே சென்று 1949 ஆகஸ்ட் மாதத்தில் ஜெர்மனி கூட்டாட்சிக் குடியரசை (FRG – The Federal Republic of Germany) உருவாக்கியது. (இது மேற்கு ஜெர்மனி என பரவலாக அழைக்கப்பட்டது). 1949 அக்டோபரில் சோவியத் ரஷ்யா ஜெர்மன் ஜனநாயகக் குடியரசை (GDR – The German Democratic Republic) உருவாக்கின. (இது கிழக்கு ஜெர்மனி என பரவலாக அறியப்பட்டது). ஜெர்மனி பிரிக்கப்பட்டதே உண்மையான பனிப்போரின் தொடக்கத்திற்கான குறியீடு எனில், 1990இல் நடைபெற்ற ஜெர்மனியின் மறுஇணைப்பு பனிப்போர் முடிவுற்றதன் குறியீடாகும்.



பெர்லின் முற்றுகையும் விமான உதவியும்

## 15.2 கெடுபிடிப்போர் (பனிப்போர்)

1947 ஏப்ரல் 16இல் அமெரிக்க குடியரசுத் தலைவரின் ஆலோசகரான பெர்னார்ட் பரூச் என்பவர் கொலம்பியாவில் அரசு மாளிகையில் உரை நிகழ்த்துகையில், இரண்டாவது



12th_History_TM_Unit_15_V2.indd 282 2/4/2020 11:15:01 AM

உலகப்போருக்குப் பின்னர், அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே நிலவிய உறவை விவரிப்பதற்குப் "பனிப்போர்" (Cold war) எனும் சொல்லைப் பயன்படுத்தினார் (இச்சொல்லை உருவாக்கியவர் புகழ்பெற்ற ஆங்கிலேய எழுத்தாளரும் "விலங்குப் பண்ணை" (Animal Farm) எனும் நூலின் ஆசிரியருமான ஜார்ஜ் ஆர்வெல் என்பவராவார்). ஆயுதங்கள் இல்லாத போரான இப்பனிப்போர் கருத்தியல் ரீதியிலான போராகும்.

1945 முதல் 1991 வரையிலான காலப்பகுதியில் வல்லரசுகளின் வெளியுறவுக் கொள்கைகளைப் பனிப்போரே வரையறை செய்தது. இக்காலகட்டத்தில் இவ்விரு சக்திகளுமே நிரந்தரமான போருக்கு ஆயத்தமாக இருந்தன. அமெரிக்கா தனது பொருட்களுக்கான திறந்தவெளி சந்தையை மேம்படுத்தவும் பொதுவுடைமைத் தத்துவத்தின் பரவலைக் கட்டுப்படுத்தவும் விரும்பியது. மற்றொருபுறத்தில் சோவியத் ரஷ்யா பொதுவுடைமைத் தத்துவத்தைப் பரப்பவும், தனது கோட்பாடுகளுடன் இணைந்து செல்லும் எல்லைப்புற நாடுகளுடன் நட்புணர்வைப் பேணவும் விருப்பம் கொண்டது. தங்களது குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இவ்விரு சக்திகளும் ஆறு முக்கிய உத்திகளைக் கையாண்டன. அவை பொருளாதார உதவி, இராணுவ ஒப்பந்தங்கள், பரப்புரை செய்தல், உளவறிதல், நேரடியாக மோதாமல், மோதலின் விளிம்புவரை செல்லுதல் மற்றும் மறைமுகப் போர் ஆகியனவாகும்.

## பனிப்போர் செயல்திட்டங்கள்

### அ) பொருளாதார உதவி

### ட்ரூமன் திட்டம்

1945இல் கிரீஸில் ஒரு உள்நாட்டுப்போர் வெடித்தது. பல ஆண்டுகளாக கிரீசுக்கு ஆதரவு தந்த இங்கிலாந்து தனது சொந்தப் பொருளாதாரப் பிரச்சனைகளின் காரணமாக ஆதரவை விலக்கிக் கொண்டது. சிலகாலம் கழித்துத் துருக்கியிலும் பிரச்சனை ஏற்பட்டதால் கம்யூனிஸ்டுகள் தங்கள் கட்டுப்பாட்டை அங்கு ஏற்படுத்த முயன்றனர். கிரீசிலும் துருக்கியிலும் இனிமேற்கொண்டு பொதுவுடைமைவாதிகளின் கிளர்ச்சிகளைத் தன்னால் எதிர்கொள்ள இயலாதெனவும், பிரச்சனைகளை மார்ச் 31இல் இருந்தவாறே விட்டுவிடப் போவதாகவும் 1947இல் இங்கிலாந்து அமெரிக்காவிடம் கூறியது. இச்சூழலில் அமெரிக்கா செயல்பட முடிவுசெய்தது. குடியரசுத் தலைவர் ஹாரி. எஸ். ட்ரூமன் கிரீசுக்கும் துருக்கிக்கும் ஆதரவாகச் செயல்பட முடிவுசெய்தார். எந்த நாடுகளில் கம்யூனிச கொள்கையினால் மேலாதிக்கம் செலுத்தப்படுகிறதோ அந்நாடுகளுக்குப் பொருளாதார மற்றும் ராணுவ உதவிகளை வழங்கப்போவதாக உறுதியளித்தார். இது கம்யூனிசத்தைக் கட்டுப்படுத்தும் அமெரிக்காவின் கொள்கையை வரையறை செய்தது. ட்ரூமன் கோட்பாடு எனப் பரவலாக அறியப்பட்ட இக்கோட்பாடு பனிப்போர் முடியும் வரை கோலோச்சியது.



ட்ரூமன் மற்றும் மார்ஷல்

### மார்ஷல் திட்டம்

கிரீஸ் மற்றும் துருக்கியில் பெற்ற அனுபவத்தில், கம்யூனிசத்தைக் கட்டுப்படுத்துவதில் அமெரிக்க டாலரின் மதிப்பு என்ன என்பதை அமெரிக்கா புரிந்து கொண்டது. எனவே கம்யூனிசத்தின் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அதே திசை வழியில் பயணிப்பது என அமெரிக்கா முடிவு செய்தது. 1947 ஜூன் மாதத்தில் குடியரசுத்தலைவர் ட்ரூமனின் கீழிருந்த அரசுச் செயலரான ஜார்ஜ். C. மார்ஷல் ஒரு பொருளாதாரத் திட்டத்தை வகுத்தார். இரண்டாம் உலகப்போரால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கான இத்திட்டத்தை அவர் ஐரோப்பிய மீட்புத் திட்டம் என அழைத்தார். "எங்களின் கொள்கை எந்த நாட்டிற்கும் எதிரானதல்ல அல்லது எந்தக் கோட்பாட்டிற்கும் எதிரானதல்ல. ஆனால் பசி, வறுமை, விரக்தி மற்றும் குழப்பங்கள் ஆகியவற்றிற்கு எதிரானது" என மார்ஷல் அறிவித்தார். இதனடிப்படையில் ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டன. மார்ஷல் திட்டத்தின் பெயரால் அடுத்து வந்த நான்கு ஆண்டுகளில் 13,000 மில்லியன் டாலர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வழங்கப்பட்டது. 1948இல் பதினாறு ஐரோப்பிய நாடுகளும் ஜெர்மனியின் மூன்று மேற்கு மண்டலங்களும் சேர்ந்து ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு (Organisation for European Economic Cooperation – OEEC) எனும் அமைப்பை உருவாக்கின. மார்ஷல் திட்டம் நான்காண்டுகளுக்கு நீடித்தது (1948 – 1952). சோவியத் ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சரான மோலோடோவ் மார்ஷல் திட்டத்திற்கு "டாலர் ஏகாதிபத்தியம்" என கேலிப்பெயர் சூட்டினார்.




12th_History_TM_Unit_15_V2.indd 283 2/4/2020 11:15:01 AM

சோவியத் யூனியனின் பார்வையில் மார்ஷல் திட்டமானது அமெரிக்காவின் செல்வாக்கைப் பரப்பும் சூழ்ச்சியாகவே கருதப்படுகிறது.

**மோலோடோவ் திட்டம்**

மார்ஷல் திட்டத்திற்குப் பதிலளிக்கும் வகையில் சோவியத் ரஷ்யா கோமின்பார்ம் (The Cominform) எனும் அமைப்பை 1947 செப்டம்பரில் உருவாக்கியது. இவ்வமைப்பில் ஐரோப்பிய நாடுகளின் அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர். கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளுடனான வணிக உறவுகளைத் தடுக்கமுயன்ற இவ்வமைப்பு உறுப்பு நாடுகளிடையே கருத்தியல் ரீதியிலான, பொருட்கள் சார்ந்த தொடர்புகளை உருவாக்க முயன்றது. 1949இல் சோவியத் ரஷ்யா மோலோடோவ் திட்டம் எனும் பெயரில் தனது பொருளாதாரத் திட்டத்தை முன்வைத்து, சோவியத் யூனியன், அதனை சார்ந்த நாடுகள் ஆகியவற்றின் பொருளாதாரக் கொள்கைகளை ஒருங்கிணைப்பதற்காகக் கோமிகன் (Comecon) அதாவது 'பரஸ்பர பொருளாதார உதவிக் குழு' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.



ஜோசப் ஸ்டாலின் மற்றும் மோலோடோவ்

### ஆ) இராணுவ ஒப்பந்தங்கள்

இராணுவ ஒப்பந்தங்களின் மூலம் போர் முக்கியத்துவம் வாய்ந்த உறவுகளை உருவாக்கிக் கொள்ளுதல், தங்கள் முகாமை விரிவடையச் செய்து கொள்வதற்காக இரு சக்திகளும் பின்பற்றிய மற்றுமொரு குறிப்பிடத்தக்க தந்திரமாகும். 1948இல் கிழக்கு ஐரோப்பாவில் செக்கோஸ்லோவாக்கியா மட்டுமே ஜனநாயக நாடாக இருந்தது. அது முதலாளித்துவ முகாமைச்சேர்ந்த நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே இடைப்படு நாடாக இருந்தது. அங்கு 1948 மே மாதத்தில் நடைபெற்ற தேர்தல்களில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது. இவ்வெற்றி மேற்கு ஐரோப்பிய நாடுகளை மேலும் அச்சமடையச் செய்தது.

**நேட்டோ நாடுகள் – வட அட்லாண்டிக் ஒப்பந்தம் (NATO)**

அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டிருந்தாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் தாங்கள் பாதுகாப்பாக இல்லை என்றே உணர்ந்தன. செக்கோஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்டுகள் பெற்ற வெற்றி அவர்களின் அச்சத்தை அதிகரித்தது.

> 1952 நவம்பர் 1இல் பசுபிக் பகுதியின் மார்ஷல் தீவுகளில் எலுஜெலாப் அட்டோல் எனுமிடத்தில் அமெரிக்கா, 'மைக்' எனப் பெயரிடப்பட்ட உலகின் முதல் ஹைட்ரஜன் அணுகுண்டை வெடித்துப் பரிசோதனை செய்தது. மூன்றாண்டுகளுக்குப் பின்னர், 1955 நவம்பர் 22இல் சோவியத் யூனியன் தனது முதல் ஹைட்ரஜன் குண்டை வெடித்துப் பரிசோதனை செய்தது.

இதனைத் தொடர்ந்து மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒரு கூட்டுப் பாதுகாப்புத் தீர்வை ஏற்படுத்திக் கொள்வதில் விருப்பம் கொண்டன. 1948 மார்ச்சில் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் லக்சம்பர்க் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பிரஸ்ஸல்ஸ் நகரில் சந்தித்து உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர். அவ்வொப்பந்தம் இராணுவ, அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டுத் துறைகளில் கூட்டுச் செயல்பாட்டுக்கு வழிவகுத்தது. சிலகாலங்களுக்குப் பின்னர் அமெரிக்கா, இத்தாலி, கனடா, ஐஸ்லாந்து, டென்மார்க், நார்வே, அயர்லாந்து மற்றும் போர்த்துகல் ஆகிய நாடுகளும் மேற்குறிப்பிட்ட ஐந்து பிரஸ்ஸல்ஸ் உடன்படிக்கை நாடுகளுடன் இணைந்து நேட்டோ அமைப்பை உருவாக்கின. இவ்வமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்புநாடுகள் அனைத்தும் தங்களில் யாராவது ஒருவர் தாக்கப்பட்டால் அத்தாக்குதல் அனைவர் மேலும் தொடுக்கப்பட்ட தாக்குதலாகக் கருதுவதற்கு ஒத்துக்கொண்டன. மேலும் அந்நாடுகள் தங்கள் படைகளை நேட்டோவின் கூட்டுத் தலைமையின்





நேட்டோ சந்திப்பு – 1950

கட்டுப்பாட்டின் கீழ் வைத்தன. ஆனால் இக்கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாடு ஐரோப்பாவிலோ அல்லது வட அமெரிக்காவிலோ நடைபெறும் தாக்குதலுக்கு மட்டுமே பொருந்தும். காலனி நாடுகளில் நடைபெறும் மோதல்கள் இதனுள் அடங்காது. 1952இல் கிரீஸ் மற்றும் துருக்கி நேட்டோவில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. 1955இல் மேற்கு ஜெர்மனியும் இவ்வமைப்பில் இணைந்தது.

**வார்சா உடன்படிக்கை அமைப்பு** (Warsaw)

மேற்கு ஜெர்மனி நேட்டோ அமைப்பில் உறுப்பினரானதை ஒரு நேரடி பயமுறுத்தலாகப் பார்த்த சோவியத் ரஷ்யா எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1955 மே மாதத்தில் சோவியத் யூனியனும் அதன் ஏழு ஐரோப்பிய நட்பு நாடுகளும் பரஸ்பர நட்பு, "ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி ஒப்பந்தம்" எனும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. போலந்தின் தலைநகரான வார்சாவில் இது கையெழுத்திடப்பட்டதால் இது வார்சா உடன்படிக்கை எனப் பெயரிடப்பட்டது. சோவியத் யூனியன் அல்பேனியா, போலந்து, ருமேனியா, ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லோவாக்கியா மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகளே வார்சா உடன்படிக்கை உறுப்பு நாடுகளாகும். உறுப்பு நாடுகளில் ஏதேனும் ஒரு நாடு வெளிநாட்டுப் படைகளால் தாக்கப்படுமேயானால் ஏனைய உறுப்பு நாடுகள் தாக்கப்பட்ட நாட்டைப் பாதுகாக்க உதவிக்கு வரவேண்டுமென இவ்வுடன்படிக்கை கூறியது. சோவியத் யூனியனைச் சேர்ந்த மார்ஷல் இவான் எஸ். கோனெவ் என்பாரின் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட ராணுவம் உருவாக்கப்பட்டது. 1991ஆம் ஆண்டு சோவியத் யூனியனின் சரிவு வரை வார்சா ஒப்பந்தம் செயல்பட்டது.



மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மாநாடு

**சீட்டோ (தென் கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை அமைப்பு)** (SEATO)

1949இல் சீனா, மாவோவின் தலைமையில் கம்யூனிஸ்ட் நாடானது. கம்யூனிசம் சீனாவிலிருந்து கொரியாவிற்குப் பரவியது. ஆசியப் பகுதிகளில் கம்யூனிசம் பரவுவதை கண்டு அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகளும் 1951 செப்டம்பரில் முத்தரப்பு ராணுவ உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. (இது ANZUS உடன்படிக்கை என அழைக்கப்படுகிறது) 1954இல் அமெரிக்கா தேசிய சீனா என்றறியப்பட்ட தைவானுடன் பரஸ்பர ராணுவ உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. இதன்படி தைவான் கம்யூனிஸ்ட் சீனாவால் தாக்கப்பட்டால் அமெரிக்கா தைவானுக்கு உதவி செய்யும்.

1954 செப்டம்பரில் அமெரிக்கா, பிரான்ஸ், கிரேட் பிரிட்டன், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை எனும் அமைப்பை நிறுவின. சீட்டோ (SEATO) எனும் இவ்வமைப்பு ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் நேட்டோவின் பிரதியாக அமைந்ததாகும். ஆனால் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய இரண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகளைத் தவிர ஏனைய நாடுகள் இவ்வுடன்படிக்கையில் பங்கேற்க மறுத்துவிட்டன. இவ்வுடன்படிக்கையின் தலைமையிடம் பாங்காக்கில் செயல்பட்டது. சீட்டோ ஒரு ஆலோசனை மன்றமாக மட்டுமே செயல்பட்டது. உள்நாட்டில் ஏற்படும் ஆபத்துக்களைப் பொறுத்தமட்டிலும் சம்பந்தப்பட்ட நாடுகளே அவற்றை எதிர்கொள்ள வேண்டும். சீட்டோ அமைப்பானது நேட்டோவைப் போல செல்வாக்குப் பெற்ற அமைப்பாக இல்லை. வியட்நாம் போர் முடிந்த நிலையில் 1977இல் சீட்டோ கலைக்கப்பட்டது.



சீட்டோ (SEATO) மாநாடு, மணிலா

**மத்திய கிழக்கு ஆசிய உடன்படிக்கை** (CENTO)

1955ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஈராக் மற்றும் துருக்கி ஆகிய இரு நாடுகளும் பாக்தாத்தில் "பரஸ்பர ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றில்" கையெழுத்திட்டன. அப்பகுதியிலுள்ள அனைத்து நாடுகளும் இவ்வமைப்பில் உறுப்பினர்



12th_History_TM_Unit_15_V2.indd 285 2/4/2020 11:15:02 AM

ஆகலாம். ஏப்ரல் மாதத்தில் கிரேட் பிரிட்டன் இவ்வுடன்படிக்கையில் இணைந்தது. அதனைத் தொடர்ந்து பாகிஸ்தானும் ஈரானும் இணைந்தன. கம்யூனிசவாதிகளின் செல்வாக்கை தடுப்பதே பாக்தாத் உடன்படிக்கையின் நோக்கமாக இருந்தது. மத்திய கிழக்குப் பகுதியில் 1958இல் வரிசையாக நடைபெற்ற பல நிகழ்வுகள் அப்பிராந்தியத்தின் நிலைத்தன்மையை அச்சத்திற்கு உள்ளாக்கின. அவைகளில் முக்கியமானவை எகிப்து–சிரியா இணைப்பு, ஈராக்கில் ஏற்பட்ட புரட்சி, லெபனானில் ஏற்பட்ட உள்நாட்டு கிளர்ச்சி ஆகியனவாகும். இந்நிகழ்வுகளின் விளைவாக அமெரிக்கா லெபனானின் அரசியலில் தலையிட்டது. பாக்தாத் உடன்படிக்கையின் உறுப்பு நாடுகளில் ஈராக் தவிர ஏனைய நாடுகள் அமெரிக்காவின் தலையீட்டை அங்கீகரித்ததால் ஈராக் உடன்படிக்கையிலிருந்து விலகியது. இதன் விளைவாகப் பாக்தாத் உடன்படிக்கையில் உள்ள மற்ற நாடுகள் ஒருங்கிணைந்து சென்டோ (Central Treaty of Organisation – CENTO) அமைப்பை உருவாக்கின. துருக்கியின் அங்காரா நகரத்திற்கு இதன் தலைமையிடம் மாற்றப்பட்டது. இவ்வமைப்பை அமெரிக்கா தொடர்ந்து ஆதரித்தது. ஆனால் இவ்வமைப்பில் உறுப்பு நாடாக இணையவில்லை. 1979இல் ஏற்பட்ட ஈரானிய புரட்சி, அரசர் ஷாவின் ஆட்சியைத் தூக்கியெறிந்தது. அதனைத் தொடர்ந்து ஈரானும் அமைப்பிலிருந்து வெளியேறியது. அமைப்பு வலுவாகச் செயல்படவில்லை என்பதால் அதே ஆண்டில் பாகிஸ்தானும் விலகியது. 1979இல் இவ்வமைப்பு அதிகாரபூர்வமாகக் கலைக்கப்பட்டது.

### இ) பரப்புரை செய்தல்

பனிப்போரின்போது அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் தங்கள் கருத்தியலைப் பற்றி புகழ்பாடவும் எதிரிகளின் சிந்தனைகளையும் மதிப்பீடுகளையும் விமர்சனம் செய்யவும் பரப்புரை செய்வதை ஒரு சக்திவாய்ந்த கருவியாகப் பயன்படுத்தின. அமெரிக்கா குறித்துப் பெருமை கொள்ளத்தக்க அனைத்துக் கருத்துகளும் மதிப்பீடுகளும் திரைப்படங்கள், காணொளி, இசை, இலக்கியம் மற்றும் கலை ஆகியவை மூலமாகப் பரப்பப்பட்டன. முதலாளித்துவத்தை மேம்படுத்த தத்துவமாக முன்வைத்த அமெரிக்கா, ஒரு அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார கருத்தியல் என்ற அளவில் கம்யூனிசத்தைக் கண்டனம் செய்தது. மாறாக சோவியத் ரஷ்யாவில் சோஷலிசம் என்ற அமைப்பினுள் கூட்டு உழைப்பும் கூட்டுத் தலைமையுமே சிறந்தவை என ஊக்குவிக்கப்பட்டன. ஜனநாயகமும் சந்தைப் பொருளாதாரமும் முதலாளித்துவத்தின் சுரண்டல் தன்மையை மறைப்பதற்கான முகப்புத்தோற்றமே என விமர்சிக்கப்பட்டன.

### ஈ) உளவறிதல்



CIA தலைமையகம்

இரு வல்லரசுகளுமே பரஸ்பரம் இராணுவ ரகசியங்கள் குறித்த செய்திகளையும், ஏனைய முக்கிய ஆவணங்கள் பற்றிய விபரங்களைச் சேகரிக்கவும் உளவறிதல் (அ) ஒற்றறிதல் முறையை முக்கியக் கருவியாகப் பயன்படுத்தின. பனிப்போரின் போது இருவல்லரசுகளும் வலுவான உளவுத்துறை – சேகரிக்கும் அமைப்புகளை பராமரித்தன. அமெரிக்காவின் உளவு நிறுவனமான மத்திய புலனாய்வு முகமை (Central Inteligence Agency – CIA) 1947இல் நிறுவப்பட்டது. சோவியத் யூனியனின் உளவு நிறுவனமான KGB (Komite Gposudars Tvennoy Besopasnbosti or committee for National Security) 1954இல் உருவாக்கப்பட்டது. இந்த உளவறிதல் போர் பெருமளவில் சந்தேகத்தையும் வெறுப்பையும் தூண்டியது. உளவாளிகளைக் கதாநாயகர்களாகவும் வில்லன்களாகவும் கொண்டு பரபரப்பாகப் பேசப்பட்ட பல திரைப்படங்களும், நாவல்களும் இக்காலத்தில் வெளியிடப்பட்டன. (எ. கா. ஜேம்ஸ் பாண்ட் திரைப்படங்கள்)



KGB அலுவலகம்

### உ) போரின் விளிம்பு வரை செல்வது


போரின் விளிம்புவரை செல்வது (போர் செய்வதல்ல) எனும் இச்சொல்லாடல் பனிப்போர் காலத்தில் நிலையாக பயன்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் அரசுச் செயலாளர் ஜான் பாஸ்டர் டல்லஸ் 1956இல் 'லைப்' (Life) எனும் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில்



12th_History_TM_Unit_15_V2.indd 286 2/4/2020 11:15:02 AM

இச்சொல்லாடலைப் பயன்படுத்தினார். அரசியல் விவேகத்தில் "போரின் விளிம்பு வரை (போரின் தொடக்க முனை) செல்வதற்கு நீங்கள் அச்சம் கொண்டால் நீங்கள் தோற்றவர்களாவீர்கள்" எனக் கூறினார் இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்வைக் கூறலாம். 1962இல் கியூபாவில் சோவியத் யூனியன் அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் ஏவுகணைகளை நிறுவியது. அணு ஆயுதப் போர் ஏற்பட்டுவிடுமோ எனும் நிலை ஏற்பட்டது. இதற்குப் பதிலடியாக அமெரிக்க கடற்படைகள் கியூபாவை முற்றுகையிட்டன. இறுதியில் பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட பின்னர் கியூபாவிலிருந்த ஏவுகணைகள் அகற்றப்பட்டன.

போரின் விளிம்பு வரை செல்வதென்பது, ஒரு நிகழ்வு, தனக்குச் சாதகமாக முடியவேண்டும் என்பதற்காக ஆபத்தான நிகழ்வுகளை உண்மையான போர் நடைபெறுவதற்கான விளிம்புவரை நகர்த்திச் செல்வதாகும். பன்னாட்டு அரசியலில், வெளியுறவுக் கொள்கைகளில், இராணுவ உத்திகளில் இது இடம் பெறுகின்றது. இது அணு ஆயுதப் போர் குறித்த அச்சத்தையும் உள்ளடக்கியதாகும்.




கியூபா ஏவுகணை சிக்கல்

### ஊ) மறைமுகப் போர்கள் (சார்புப் போர்கள்)

அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் பனிப்போரின் ஒரு பகுதியாக மறைமுகப் போர்களில் ஈடுபட்டன. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள், பனிப்போரின்போது நடைபெற்ற கொரியப் போரும் (1950–1953) வியட்நாமியப் போர்களுமாகும் (1955–1975). இவ்விருபோர்களிலும் வட கொரியாவிலும், வடவியட்நாமிலும் இருந்த கம்யூனிச அரசுகளுக்குச் சோவியத் யூனியன் ஆதரவளித்தது. அமெரிக்கா தென் கொரியாவிற்கும் தென் வியட்நாமிற்கும் துணையாக நின்றது. இப்போர்களின் விளைவாகப் பெருமளவிலான உயிர்ச் சேதங்களுக்கும், பொருள் நஷ்டங்களும் ஏற்பட்டதோடு, இப்போர்கள் உள்நாட்டுப் போர்களாகவும் மாறின. இப்போர்களின் போது பன்னாட்டு அளவிலான பொதுக்கருத்துகளும் திரட்டப்பட்டன. வியட்நாம் நாட்டிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புகள் அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல், சமூகம் மற்றும் பண்பாடு ஆகியவற்றின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின.

## 15.3 மூன்றாம் உலக நாடுகளும் அணிசேரா இயக்கமும்

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரான சூழலில் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகியனவற்றைச் சேர்ந்த பல காலனிய நாடுகள் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றன. அமெரிக்காவும் சோவியத் யூனியனும் பின்பற்றிய பனிப்போர் உத்தியைக் கண்டு இப்புதிய சுதந்திர நாடுகள் கவலை கொண்டன. இவ்வதிகார முகாம்களை ஏகாதிபத்தியத்தின் மற்றொரு வடிவமாகவே இந்நாடுகள் கருதின. இவ்விரு முகாம்களோடும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள அவை விரும்பவில்லை. இந்நாடுகள் தங்களை மூன்றாம் உலக நாடுகள் என்று அழைத்துக் கொண்டன. "மூன்றாம் உலக நாடுகள்" எனும் இச்சொல்லாடலை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வரலாற்றிஞரும், மக்கள் தொகை ஆய்வாளருமான ஆல்பிரட் சாவி என்பார் 1952இல் உருவாக்கினார். மூன்றாம் உலகநாடுகள் தங்கள் வெளியுறவுக் கொள்கைகளில் சுதந்திரமான மற்றும் நடுநிலையான கொள்கையைப் பின்பற்ற விரும்பின.

### அணி சேராக் கொள்கை (NAM)

1955ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் பாண்டுங் என்ற இடத்தில் நடைபெற்ற முதல் ஆசிய–ஆப்பிரிக்க மாநாட்டில், பெரும்பாலும் புதிதாக விடுதலையடைந்த எகிப்து, இந்தியா, இந்தோனேசியா, ஈராக் மற்றும் சீன மக்கள் குடியரசு உட்பட 29 ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் கூடின. காலனியாதிக்கம், இன ஒதுக்கல் மற்றும் பனிப்போரால் வளர்ந்துவரும் பதட்டம் ஆகியவற்றை இம்மாநாடு கண்டனம் செய்தது. "உலக அமைதி மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான பிரகடனம்" ஒன்றை இம்மாநாடு வெளியிட்டது. இப்பிரகடனம், நேருவின் பஞ்சசீலக் கொள்கையையும் பனிப்போருக்கு எதிரான நடுநிலை வகிக்கும் கூட்டு உறுதிமொழியையும் உள்ளடக்கியிருந்தது. பாண்டுங் மாநாட்டில் முடிவு செய்யப்பட்ட பத்து கொள்கைகளும்



12th_History_TM_Unit_15_V2.indd 287 2/4/2020 11:15:02 AM

பின்னர் அணிசேரா இயக்கத்தின் வழிகாட்டு நெறிகளாயின. Non–Alignment (அணிசேரா) எனும் வார்த்தை முதன் முதலில் V.K கிருஷ்ணமேனன் என்பவரால் ஐக்கிய நாடுகள் சபையில் 1953இல் உரையாற்றுகையில் உருவாக்கப்பட்டது.



பாண்டுங் மாநாடு

பாண்டுங் மாநாட்டின் பத்துக் கொள்கைகளின் அடிப்படையில் இவ்வமைப்பின் முதல் மாநாடு 1961இல் யுகோஸ்லோவியாவின் தலைநகரான பெல்கிரேடில் நடைபெற்றது. அணிசேரா இயக்கத்தை நிறுவியதில் ஐந்து உறுப்பினர்கள் சிறப்புப் பங்கினை வகித்தனர். அவர்கள்: ஜவகர்லால் நேரு (இந்தியா), சுகர்னோ (இந்தோனேசியா), கமால் அப்துல் நாசர் (எகிப்து), குவாமி நுக்குருமா (கானா) மற்றும் ஜோசிப் பிரோஷ் டிட்டோ (யுகோஸ்லோவியா) ஆகியோராவர். அணிசேரா இயக்கத்தின் நோக்கம் "உலக அரசியலில் ஒரு சுதந்திரமான பாதையை உருவாக்குவதாகும்". ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் ஆகியவற்றிற்கு முற்றுப்புள்ளி வைத்தல் பன்னாட்டு அமைதியையும் பாதுகாப்பையும் மேம்படுத்துதல், ஆயுதக் குறைப்பு,



முதல் அணிசேரா மாநாடு, பெல்கிரேட்

இனவாதத்தையும் இனப்பாகுபாட்டையும் முடிவுக்குக் கொண்டுவருதல் ஆகிய முக்கிய நோக்கங்களை உள்ளடக்கியதாகும். பெல்கிரேடு மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கை வல்லரசுகளுடன் இராணுவ ஒப்பந்தங்கள் மேற்கொள்வதையும், தங்கள் நாட்டின் பகுதிகளில் இராணுவத் தளங்களை அமைப்பதற்கு வல்லரசுகளை அனுமதிப்பதையும் தடை செய்தது.

அணிசேரா இயக்கத்தை முன்னெடுத்தவர்கள், 1955ஆம் ஆண்டு பாண்டுங் மாநாட்டில் கீழே குறிப்பிடப்பட்டவற்றை இயக்கத்தின் இலக்குகளாகவும், நோக்கங்களாகவும் நிர்ணயம் செய்தனர்.

- அடிப்படை மனித உரிமைகளை மதித்தல். ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் மதித்தல்.
- அனைத்து நாடுகளின் இறையாண்மையையும் அவற்றின் எல்லைப்பரப்பு ஒருமைப்பாட்டையும் மதித்தல்.
- சிறியவை, பெரியவை என்றில்லாமல் அனைத்து இனங்களும், அனைத்து நாடுகளும் சமம் என அங்கீகரித்தல்.
- அடுத்த நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமலும் குறுக்கீடு செய்யாமலும் இருத்தல்.
- ஐ.நா சபையின் சாசனத்திற்கு இணங்க ஒவ்வொரு நாடும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றுள்ளதை மதித்தல்.
- வல்லரசு நாடுகளில் ஏதாவது ஒன்றின் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக கூட்டுப்பாதுகாப்பு உடன்படிக்கைகளைப் பயன்படுத்தாதிருத்தல்.
- எந்த நாடாக இருந்தாலும் அதன் அரசியல் சுதந்திரம், எல்லைப்பரப்பு ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு அச்சத்தை ஏற்படுத்தும், இராணுவ நடவடிக்கைகள், வலியச்சென்று தாக்குதல் போன்ற நடவடிக்கைகளைத் தவிர்த்தல். ஒருநாடு மற்றநாடுகளுக்கு எதிராக நெருக்கடிகளை தருதல் என்பதைப் பயன்படுத்தக் கூடாது.
- அனைத்துப் பன்னாட்டுப் பிரச்சனைகளுக்கும் அமைதியான வழியில் தீர்வு காணப்பட வேண்டும். பேச்சுவார்த்தைகள், சமாதானம், நடுவர் தீர்ப்பு, சட்டங்களின் வழியிலான தீர்ப்பு அல்லது சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் விரும்புகிற, ஐ.நா. சபை சாசனத்திற்கு



12th_History_TM_Unit_15_V2.indd 288 2/4/2020 11:15:03 AM

இணக்கமான, வழிகள் ஆகியவற்றின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும்.

- பரஸ்பர அக்கறை, ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- நீதி மற்றும் பன்னாட்டு கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.

பனிப்போரின்போது அணிசேரா இயக்கம் அமெரிக்க, சோவியத் யூனியன் ஆகிய இரு அதிகார முகாம்களுக்கு ஒரு மாற்றாகச் செயல்பட்டது. சோவியத் யூனியனின் சரிவோடு அணிசேரா இயக்கம் தேவையற்றதானது.

நேருவின் பஞ்சீலக் கொள்கை:
1) நாடுகளிடையே இறையாண்மை, எல்லைப் பரப்பு குறித்த பரஸ்பர மரியாதை
2) பரஸ்பரம் ஆக்கிரமிப்பு இல்லாத நிலை
3) பரஸ்பரம் ஒருநாடு மற்றொன்றின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமலிருத்தல்
4) சமத்துவம் மற்றும் பரஸ்பர நன்மை
5) சமாதான சகவாழ்வு

## 15.4 ஐ.நா. சபையும் உலகளாவிய பிரச்சனைகளும்

பன்னாட்டு சங்கம் (League of Nations) தோல்வியுற்றதை இரண்டாவது உலகப்போர் மெய்ப்பித்தது. இதைப் போன்று மற்றொரு போர் நடைபெறாமலிருக்க ஒரு வலுவான அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உலகத் தலைவர்கள் உணர்ந்தனர். வாஷிங்டன் நகரில், ஜார்ஜ்டவுன் பகுதியில் உள்ள டம்பார்டன் ஓக்ஸ் எனும் மாளிகையில் சீனா, சோவியத் யூனியன், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி (1944 ஆகஸ்டு 21 முதல் அக்டோபர் 7 முடிய) உலக அமைப்புக்கான ஓர் செயல்திட்டத்தை உருவாக்கினர். 1943இல் மாஸ்கோ பிரகடனம் பன்னாட்டு சங்கத்திற்குப் பதிலாகப் பன்னாட்டு அளவில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அங்கீகரித்தது. இதனைத் தொடர்ந்து 1945 பிப்ரவரியில் நடைபெற்ற யால்டா மாநாட்டில் பாதுகாப்பு சபையில் வாக்களிக்கும்முறை குறித்தும் வேறுசில பிரச்சனைகள் பற்றியும் கேள்விகள் எழுப்பப்பட்டன. 1945 ஏப்ரல் மாதம் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற மாநாட்டில் இவை தொடர்பான விவாதங்களும் பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் இறுதி செய்யப்பட்டது.

B7U7X6



யால்டா மாநாடு

ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24இல் 51 உறுப்பினர்களோடு உதயமானது. பொது சபை, பாதுகாப்பு சபை, பொருளாதார மற்றும் சமூக அவை, தர்மகர்த்தா அவை, பன்னாட்டு நீதிமன்றம் மற்றும் ஐ.நாவின் தலைமைச் செயலகம் ஆகியவை இவ்வமைப்பின் முக்கிய அங்கங்களாகும். நார்வே நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சரான டிரிக்வே லை ஐ.நா.வின் முதல் பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேற்சொல்லப்பட்ட முக்கிய அங்கங்கள் தவிர ஐ.நா.சபை 15 சிறப்பு நிறுவனங்களை கொண்டுள்ளது. பன்னாட்டு தொழிலாளர் சங்கம் (ILO–ஜெனிவா), உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO–ரோம்), பன்னாட்டு நிதியம் (IMF–வாஷிங்டன்), ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (யுனெஸ்கோ UNESCO–பாரிஸ்), உலக சுகாதார அமைப்பு (WHO–ஜெனிவா), உலக வங்கி (வாஷிங்டன் D.C.) ஆகியவை சில முக்கியமான நிறுவனங்களாகும்.



டிரிக்வே லை

### உலகளாவிய பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஐ.நா. சபையின் பங்கு

"போர்கள் மனிதர்களின் மனங்களிலிருந்து தொடங்குவதால் அம்மனிதர்களின் மனங்களில்தான் அமைதிக்கான பாதுகாப்புகளும் கட்டப்பட வேண்டும்" (ஐ.நா.சபை சாசனத்தின் முகவுரை)



12th_History_TM_Unit_15_V2.indd 289 2/4/2020 11:15:03 AM

### ஐ.நா. சபை தலைமையகம்



ஐ.நா. சபை தலைமையகம், நியூயார்க்

ஐக்கிய நாடுகள் சபையின் உதயமும் பனிப்போரின் தொடக்கமும் ஒரேசமயத்தில் நடைபெற்றன. இக்காலகட்டத்தில் போர்களைத் தடுப்பதில்ஐ.நா.சபைமுக்கியப்பங்காற்றியது.ஆனால் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்களே பிரச்சனைகளில் ஈடுபட்டவர்களாக இருந்ததால் ஐ.நா.சபை ஒரு மௌனமான பார்வையாளராகவே இருந்தது. ஐ.நா. சபை ஒரு இராணுவத்தைப் பெற்றுள்ளது. அது ஐ.நா. அமைதிகாக்கும் படை என அறியப்படுகிறது. அப்படைக்குத் தேவையான வீரர்களை உறுப்புநாடுகள் அனுப்பி வைக்கின்றன. ஐ.நா. சபையின் படைவீரர்கள் வெளிர் நீலநிற தலைக்கவசம் அணிவதால் அவர்கள் 'நீல தலைக் கவசத்தினர்' என அழைக்கப்படுகின்றனர்.

### பாலஸ்தீன பிரச்சனை

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் யூதர்கள் தங்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு தாயகம் வேண்டுமெனக் கோரினர். அராபியர்கள் இதை எதிர்த்தனர். அப்பிரச்சனை ஐ.நா. சபையின் முன் வைக்கப்பட்டது. 1947 மே மாதம் ஐ.நா. சபையின் பொது சபை தீர்மானமொன்றை நிறைவேற்றி, அதன் மூலம் பாலஸ்தீன பிரச்சனை குறித்து விசாரித்து பரிந்துரைகள் வழங்க ஐ.நா. சபையின் பாலஸ்தீனத்திற்கான சிறப்பு குழுவொன்றை (UNSCOP) அமைத்தது. இச்சிறப்புக் குழுவின் அறிக்கையின்படி அராபியர்கள் 85 விழுக்காட்டு நிலப்பகுதிகளையும் யூதர்கள் 5.8 விழுக்காட்டு நிலப்பகுதியையும் சொந்தமாகக் கொண்டிருந்தனர். இவ்வுண்மைகளைப் பொருட்படுத்தாது, பாலஸ்தீனம் இரு நாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டுமெனவும் பெரும்பான்மை அராபியர்கள், யூதர்கள் குடியேறுவதற்கான நிலங்களை ஒப்படைக்க வேண்டுமெனவும் இக்குழு பரிந்துரை செய்தது. முன்மொழியப்பட்ட இச்செயல் திட்டத்தின்படி அராபியர்களுக்கு 45 விழுக்காடு நிலங்களைக் கொண்ட நாடும் 55 விழுக்காடு நிலப்பரப்பைக் கொண்ட யூதநாடும் உருவாகும் நிலை ஏற்பட்டது. இதன்படி 1948 மே 14இல் இஸ்ரேல் எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.



அரபு அகதிகள்

### தேசிய சீனாவை அங்கீகரித்தல்



சியாங்–கே–ஷேக் – ரூஸ்வெல்ட் – சர்ச்சில்

1949இல் சீனாவின் முதன்மை நிலப்பகுதியில் மா சே துங் கம்யூனிச அரசை உருவாக்கிய சூழலில் அங்கிருந்து பார்மோசா தீவுக்குத் தப்பிச்சென்ற சியாங்–கே–ஷேக் அங்கு தேசிய சீன அரசை உருவாக்கி தலைமை ஏற்றார். இந்நிலையில் பாதுகாப்பு சபையில் இடம் பெற்றுள்ள தேசிய சீனாவின் பிரதிநிதி அகற்றப்பட்டு அவ்விடத்தில் கம்யூனிஸ்ட் சீனாவின் பிரதிநிதி அமர்த்தப்பட வேண்டுமென சோவியத் யூனியன் கோரிக்கை வைத்தது. கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில்சோவியத்ரஷ்யா,பாதுகாப்புசபையையும் ஐ.நா. சபையின் ஏனைய அமைப்புகளையும் புறக்கணிக்க முடிவுசெய்தது. முடிவில் 1971இல் தான் சீன மக்கள் குடியரசு பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினரானது.

### கொரியப் போர் (1950 – 1953)

1910ஆம் ஆண்டு முதல் கொரியா ஜப்பானால் ஆட்சி செய்யப்பட்டது. 38வது இணை கோட்டை மையமாகக்கொண்டு கொரியா 1945இல் இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மொத்த



12th_History_TM_Unit_15_V2.indd 290 2/4/2020 11:15:03 AM

மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதியையும் பெரும்பாலுமான தொழிற்சாலைகளும் அமைந்திருந்த வடக்கு மண்டலம் சோவியத் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டது. மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பகுதி மக்களையும் வளமிக்க வேளாண் விளைநிலங்களையும் கொண்டிருந்த தென் மண்டலத்தை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. தென்கொரியாவில் ஐ.நா. சபையின் மேற்பார்வையில் நடத்தப்பட்ட தேர்தலில் சிங்மேன் ரீ என்பவர் குடியரசுத் தலைவரானார். வட கொரியாவில் கிம் இல் சுங் தலைமையில் மக்கள் ஜனநாயகக் குடியரசு எனும் பெயரில் கம்யூனிச அரசை ரஷ்யா உருவாக்கியது. இதன் பின்னர் அமெரிக்காவும் ரஷ்யாவும் தங்கள் படைகளை அங்கிருந்து விலக்கிக் கொண்டன. தொடர்ந்து தென்கொரியாவின் குடியரசுத் தலைவர் இராணுவ நடவடிக்கை மூலம் ஒட்டுமொத்த நாட்டை ஒன்றிணைப்பதே தனது குறிக்கோள் என வெளிப்படையாக அறிவித்தார். 1950 ஜூன் 25இல் வடகொரியப் படைகள் தென்கொரியாவின் மீது படையெடுத்தபோது வெளிப்படையான போர் தொடங்கியது.



கொரியப் போர்

உடனடியாக பாதுகாப்பு சபை கூடியது. சோவியத் யூனியன் பங்கேற்காத நிலையில் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது. இப்பிரச்சனையில் உதவிசெய்யும்படி ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. பதினாறு உறுப்பு நாடுகள் படை கொடுத்து உதவியதுடன் நாற்பத்தைந்து நாடுகள் பலவகைப்பட்ட உதவிகளைச் செய்தன. ஐ.நா. சபையின் படைகளுக்கு அமெரிக்கத் தளபதி மெக் ஆர்தர் தலைமையேற்றார். 1950 ஆகஸ்ட் மாதத்தில் பாதுகாப்பு சபைக்கு சோவியத் யூனியன் திரும்பியநிலையில் அமெரிக்காவின் முன்முயற்சியில், பொது சபை அவசரமாகக் கூடி, அமைதிக்காக ஒன்றுபடுகிறோம் என்ற சமாதானத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இதன்மூலம் பாதுகாப்பு சபையானது ஒரு நெருக்கடியில் உடன்பாட்டை எட்டமுடியாவிட்டால், அவசரமாகத் தேவைப்படும் பட்சத்தில் பொது சபை இராணுவத்தை பயன்படுத்தும் பரிந்துரையைச் செய்யலாம் எனும் முன்னுதாரணத்தை தெளிவாக ஏற்படுத்தியது. இத்தீர்மானம் சட்டத்திற்குப் புறம்பானது என சோவியத் ரஷ்யா நினைத்தது. 1953 ஜூலையில் போர் நிறுத்த உடன்பாடு கையெழுத்தானதோடு இப்போர் முடிவுற்றது. மேலும் இப்போர் பொது சபையின் முக்கியத்துவத்தை அதிகரிக்கச் செய்தது.

### சூயஸ் கால்வாய் பிரச்சனை, 1956



சூயஸ் கால்வாய்

சூயஸ் கால்வாய், செங்கடலை மத்தியதரைக் கடலோடு இணைக்கிறது. எகிப்திய பாஷாவின் அனுமதியோடு பெர்டினான்ட் டி லெசெப்ஸ் எனும் பிரெஞ்சுக்காரர் இக்கால்வாயைக் கட்டினார். விரைவில் கால்வாயின் மீதான உரிமை இங்கிலாந்தின் கைகளுக்கு மாறியது. ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலுள்ள மிக முக்கிய இணைப்பே இக்கால்வாய்தான். 1956 ஜூலை மாதத்தில் எகிப்தின் குடியரசுத்தலைவராக இருந்த கமால் அப்துல் நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார். அதுவரை அக்கால்வாய் ஆங்கிலோ – பிரெஞ்சு சூயஸ் கால்வாய் கழகம் எனும் தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமாக இருந்தது. இதன் விளைவாக அக்டோபர் 29இல் இஸ்ரேலியப் படைகள் சினாய் தீபகற்பம் மீது படையெடுத்தன. மறுநாள் பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் போர் விமானங்கள் எகிப்தின் விமானத் தளங்களின் மீது குண்டுகள் வீசின. 1956 நவம்பர் 5இல் பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் படைகள் எகிப்தின் துறைமுக நகரமான செய்த்தில் இறங்கின. இப்பிரச்சனை பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனால் பிரிட்டனும், பிரான்சும் மறுப்பாணையைப் (Veto) பயன்படுத்தி தீர்மானத்தைத் தடுத்தன. இச்சூழலில் சோவியத் யூனியனும் படையெடுக்குமோ என ஐயம் கொண்ட பொது சபை அமெரிக்காவின் முன்முயற்சியில்



12th_History_TM_Unit_15_V2.indd 291 2/4/2020 11:15:03 AM

அவசரக்கூட்டமொன்றைக் கூட்டி எகிப்தின் மீதான படையெடுப்பைக் கண்டனம் செய்தது. இதனால் இஸ்ரேல், கிரேட் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் போரை நிறுத்தின. எகிப்திலிருந்து தங்கள் படைகளை விலக்கிக்கொள்வது என முடிவு செய்தன. பொது சபையானது ஐக்கிய நாடுகள் சபையின் அவசரப் படை (UNEF) எனும் படையை உருவாக்க வாக்களித்தது. இப்படை மோதலில் ஈடுபடும் படையல்ல மாறாக அமைதி காக்கும் படை ஆகும். பிரச்சனையோடு தொடர்புடைய இரு தரப்பினரின் சம்மதத்தின் பெயரிலேயே இப்படை அனுப்பப்படும். டிசம்பர் 22இல் ஐ.நா.சபையின் படைகள் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப் படைகளையும் மற்றும் இஸ்ரேலியப் படைகளையும் 1957இல் மார்ச் மாதத்தில் வெளியேற்றின. நாசர் அராபிய, எகிப்திய தேசியவாதத்தின் வெற்றியாளராகவும், கதாநாயகனாகவும் வலம் வந்தார்.

### ஹங்கேரி சிக்கல், 1956



ஹங்கேரிய புரட்சி

ஸ்டாலினுடைய ஆட்சியின்போது பிரதமராக நியமிக்கப்பட்ட ஹங்கேரியின் தலைவரான ரகோசி 1953இல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதன் விளைவாக இம்ரே நேகி என்பவர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அவருக்கு அவருடைய அரசாங்கத்தின் ஆதரவுமில்லை, ரஷ்யாவும் அவருக்கு ஆதரவாக இல்லை. ரகோசி தொடர்ந்து பொதுவுடைமை கட்சியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். எழுத்தாளர்களும் அறிவார்ந்த மக்களும் அவருக்கு எதிரான எதிர்ப்புக்குத் தலைமையேற்று, ரகோசியை பதவி விலகக்கோரினர். ரகோசி 1956 ஜூலையில் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்ட பின்னரும் எதிர்ப்பு தொடர்ந்து நீடித்தது. அக்டோபர் 23இல் ஒருசில அறிவார்ந்த மக்களால் திட்டமிடப்பட்ட கிளர்ச்சி புதாபெஸ்ட்டில் வெடித்தது. அமைதியான ஆர்ப்பாட்டமாகத் தொடங்கிய அது விரைவில் சோவியத் ரஷ்யாவிற்கும் அதன் கைப்பாவையான ஹங்கேரியின் அரசுக்கும் எதிரான தேசிய எழுச்சியாக உருவெடுத்தது. அக்டோபர் 26இல் இம்ரி நேகி மீண்டும் அதிபராவதை ரஷ்யா ஏற்றுக் கொண்டது. அவர் அதிபராகப் பொறுப்பேற்றதும் பலகட்சிமுறையை அறிமுகம்செய்து ஒரு கூட்டணியாட்சியை நிறுவினார். இதனால் கோபம் கொண்ட சோவியத் ரஷ்யா ஹங்கேரிக்குள் நவம்பர் 4இல் படைகளை அனுப்பி கிளர்ச்சியை ஒடுக்கியது.

சூயஸ் கால்வாய்ப் பிரச்சனையில் எகிப்தின்மீது ஆங்கிலேய – பிரெஞ்சு – இஸ்ரேலியத் தாக்குதல் நடைபெற்ற அதே சமயத்தில்தான் ஹாங்கேரிய கிளர்ச்சியும் நடைபெற்றது. இப்பிரச்சனை பாதுகாப்பு சபைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. பாதுகாப்பு சபை உடனடியாக ரஷ்யப்படைகள் ஹங்கேரியை விட்டு விலக வேண்டுமெனத் தீர்மானித்தது. ரஷ்யா தனது மறுப்பாணை மூலம் இத்தீர்மானத்தை நிறைவேற்றவிடவில்லை. தொடர்ந்து அதே தீர்மானம் பொது சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அத்தீர்மானத்தால் பயனேதும் ஏற்படவில்லை. ஹங்கேரிக்கு எதிராக ரஷ்யா மேற்கொண்ட நடவடிக்கைகளை ஐ.நா. சபை தனது செல்வாக்கால் கட்டுப்படுத்த முடியாமல் போனது. ஒரு வலிமை மிகுந்த நாடு ஐ.நா. சபையை மீறி செயல்படுவதில் உறுதியாக இருந்தால் ஐ.நா. சபையால் எதையும் செய்யவியலாது என்பதை இந்நிகழ்வு உணர்த்தியது.

இத்துடன் ரஷ்ய அதிபர் குருச்சேவின் ரகசியப்பேச்சு அம்பலமானது. இந்நிகழ்வுகள் பன்னாட்டளவில் கம்யூனிச இயக்கத்தின் மேல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உலகம் முழுவதிலும் எண்ணிக்கையில் அதிகமானோர் குறிப்பாக எழுத்தாளர்களும் அறிவார்ந்த மக்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து விலகினர்.

### அரபு–இஸ்ரேல் போர்

1947 நவம்பரில் பாலஸ்தீனத்தை அராபியர் நாடு, யூதர்கள் நாடு என இரண்டாகப் பிரிப்பதற்கு ஐ.நா.சபை வாக்களித்து முடிவுசெய்த உடனேயே பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே போர் மூண்டது. பாலஸ்தீனத்திலிருந்து ஆங்கிலப் படைகள் வெளியேறிய பின்னர் (மே 15, 1948) இஸ்ரேல் தன்னை சுதந்திர நாடாக அறிவித்தது. இதுசமயம் ஐ.நா. சபையின் பொதுக்குழு 1947–48 போரில் அகதிகளான பாலஸ்தீனியர்களுக்கு தங்கள் வீடுகளுக்குத் திரும்பவும், ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு பெறவும் உரிமை உண்டென மீண்டும் உறுதி செய்து தீர்மானம் நிறைவேற்றியது. இதனால் போரும் முடிவுக்கு வந்தது. அடுத்த ஆண்டில் இஸ்ரேல் ஐ.நா. சபையில் உறுப்பினரானது. இஸ்ரேல் உருவாக்கப்பட்டதன் தொடக்கத்திலிருந்தே ஐ.நா.



12th_History_TM_Unit_15_V2.indd 292 2/4/2020 11:15:03 AM


சபை அரசியல் முடிவுகள் எடுப்பதில் ஓரளவே ஈடுபாடு கொண்டது. ஐ.நா.சபையின் அமைதிகாக்கும் படை எகிப்து–இஸ்ரேல் எல்லையில் முகாமிட்டிருந்தது. அகதிகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பும் காலம் வரும் வரை அவர்களுக்கு உதவுவதற்காக ஐ.நா. சபையின் அகதிகளுக்கான நிவாரண மற்றும் பணி நிறுவனம் (UNRWA) நிறுவப்பட்டது.

1966 வாக்கில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு புதிய ரக போர் விமானங்களையும் ஏவுகணைகளையும் வழங்கத்தொடங்கியது. அதன் விளைவாக பனிப்போர் மத்திய கிழக்கில் பாதம் பதித்தது. ஐ.நா.சபை காட்சியிலிருந்து காணாமல் போனது. அடுத்து வந்த சில மாதங்களில் இஸ்ரேலுக்கும் அதைச் சுற்றியுள்ள அரபு நாடுகளுக்குமிடையே பதட்டம் அதிகரித்தது. 1967ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இஸ்ரேலுக்கும் சிரியாவிற்கும் இடையில் பீரங்கிப் பரிமாற்றங்கள் இருந்தன. சிரியாவின் கடற்கரைக்குச் சற்றுதொலைவில் அமெரிக்காவின் ஆறாவது கப்பற்படை நிலைகொண்டது. இச்சூழலில் எகிப்தியப் பகுதிக்குள்ளிருந்த ஐ.நா.வின் படைகளையும், பார்வையாளர்களையும் இஸ்ரேலிய எல்லைக்கு அனுப்பும்படி ஐ.நா. சபையை எகிப்திய அதிபர் நாசர் அறிவுறுத்தினார். படைநகர்வு குறித்து அவர் கேட்கஇயலாது என ஐ.நா. சபை நாசருக்கு பதிலளித்தது. ஆகவே ஐ.நா. வின் படைகள் ஒட்டுமொத்தமாக எகிப்திலிருந்து விலக்கிக் கொள்ளப்படவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளும் ஒரு வாய்ப்பு மட்டுமே அவருக்கிருந்தது. இதனைத் தொடர்ந்து 1967 மே 23இல் எகிப்து டைரன் கடலிடுக்கு (நீர்ச்சந்தி) வழியாக இஸ்ரேலின் கப்பல்கள் பயணப்படுவதற்குத் தடைவிதித்தது. ஜூன் மாதத் தொடக்கத்தில் இஸ்ரேல் எகிப்தைத் தாக்கியது. கெய்ரோ நகரின் விமானத்தளங்களிலிருந்த விமானப்படை விமானங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன.



அரபு – இஸ்ரேல் போர்

ஆறாம் நாள் போரின் முடிவில் பாலஸ்தீனியர்கள் மீதமிருந்த பகுதிகளான மேற்குக் கரை, காஜா முனை மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகியவற்றைக் கைப்பற்றியதோடு, சிரியாவின் கோலன் குன்றுப் பகுதிகளையும் எகிப்தின் சினாய் பகுதிகளையும் இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டது. இருநூற்று ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஒரு மில்லியனுக்கும் அதிகமானமோர் இன்றும் இஸ்ரேலின் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றனர். பாலஸ்தீனப் பிரச்சனையானதுஅகதிகள் பிரச்சனை என்ற கோணத்தில் மட்டுமே அணுகப்பட்டது. அது பாலஸ்தீனர்களின் தேசிய உரிமைகளை மீண்டும் ஆதரிப்பது என்ற கண்ணோட்டத்தில் அணுகப்படுவதில்லை. ஐ.நா. சபையின் தீர்மானம் சந்தேகத்திற்கிடமில்லாமல் இஸ்ரேலியப் படைகள் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டுமெனக் கூறியது. பாதுகாப்பு சபையில் இடம்பெற்றுள்ள நான்கு நாடுகளே இத்தீர்மானத்தை வரைந்தன. பாலஸ்தீனியர்களின் உரிமைகள் குறித்து மிகக் குறைவான குறிப்புகளே இடம்பெற்றுள்ளமை, இச்செயல்பாடுகளில் அமெரிக்காவின் செல்வாக்கை உணர்த்தியது.




**பாலஸ்தீன விடுதலை இயக்கம்:** 1964க்கு முன்பு இரகசிய எதிர்ப்பியக்கங்களாக செயல்பட்ட பல்வேறு பாலஸ்தீனக் குழுக்களை ஒருங்கிணைப்பதற்காக பாலஸ்தீன விடுதலை இயக்கம் (Palestine Liberation Organisation – PLO) 1964இல் உருவாக்கப்பட்டது. 1967ஜூனில் நடைபெற்ற அரபு–இஸ்ரேல் போருக்குப் பின்னர் இவ்வமைப்பு முக்கியத்துவம் பெற்றது. 1990களில் அமைதிப் பேச்சு வார்த்தைகளுக்குள் அடியெடுத்து வைப்பதற்கு முன்பு 1980கள் முடிய PLO இஸ்ரேலுடன் நீண்ட நெடிய தற்காப்பு கொரில்லாப் போர்களில் ஈடுபட்டிருந்தது. யாசர் அராபத் இவ்வமைப்பின் மகத்தான தலைவராவார்.





12th_History_TM_Unit_15_V2.indd 293
2/4/2020 11:15:04 AM

1967ஆம் ஆண்டுப் போரைத்தொடர்ந்து பல ஆண்டுகள் இஸ்ரேல் – பாலஸ்தீன மோதல்களை முற்றிலுமாகத் தீர்த்து வைப்பதற்கு, மோதல்களோடு தொடர்புடைய அனைவரும் பங்கேற்கும் (யாசர் அராபத்தின் தலைமையில் இயங்கிய பாலஸ்தீன விடுதலை இயக்கம் உட்பட) பன்னாட்டு அமைதி மாநாட்டை தனது ஆதரவில் நடத்த ஐ.நா சபை மீண்டும் மீண்டும் முயற்சித்தது. ஒவ்வொரு முறையும் தடுப்பாணை அதிகாரம் மூலம் அமெரிக்கா அம்முயற்சிகளைத் தடுத்தது. பனிப்போர் சூழலில் இப்பகுதியில் பதட்டங்களை அதிகரிப்பதிலும் அல்லது கட்டுப்படுத்துவதிலும் மாஸ்கோவும் வாஷிங்டனும் மிகப்பெரும் பங்கு வகித்தன.

## 15.5 ஐரோப்பிய சமூக அமைப்பின் ஒருங்கிணைப்பும் விரிவாக்கமும்

நாம் முன்னர் பார்த்தவாறு, கம்யூனிசத்தைக் கட்டுப்படுத்துவது என்ற தனது கொள்கையைப் பின்பற்றி அமெரிக்கா, போரினால் சீரழிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய பொருளாதாரத்தைப் புனரமைத்துக் கொள்ள உதவிகள் செய்வதற்காக ட்ரூமன் கோட்பாட்டையும் மார்ஷல் திட்டத்தையும் முன் வைத்தது. 1948ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஐரோப்பியப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம் (OEEC) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு ஐரோப்பியப் புனரமைப்புத் திட்டத்தின் (ERP) ஆதரவில் செய்யப்படும் மார்ஷல் திட்ட உதவிகள் வழங்குவதை மேற்பார்வை செய்தது. ஐரோப்பியப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம், அமெரிக்கா செய்யும் உதவியைத் தனது 16 உறுப்பு நாடுகளுக்குப் பிரித்துக் கொடுத்தது. இந்நாடுகளுடன் அமெரிக்க வணிக நிறுவனங்கள் மேற்கொண்டிருந்த வணிகத்தை மேம்படுத்துவதற்காக, இந்நாடுகள் தங்களிடையே செயல்படுத்தி வந்த காப்பு வரிகளை நீக்கும்படி அமெரிக்கா கூறியது. அமெரிக்காவிடமிருந்து மேலும் நிதி உதவியைப் பெறும் நோக்கத்தில் காப்பு வரிகளை நீக்கச் சம்மதித்த நாடுகள் 1949 முடிய சுதந்திர வணிகத்தைப் பின்பற்றின. அமெரிக்கா செய்த உதவியின் விளைவாய் மேற்கு ஐரோப்பிய நாடுகள் 1950இல் போருக்கு முந்தைய உற்பத்தி அளவை எட்டின. பெற்ற வெற்றிகள் மேலும் அவைகளை முன்னேறச்செய்தன. ஐரோப்பியம் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம் (OEEC) ஐரோப்பிய பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி நிறுவனம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1961இல் அமெரிக்காவும் கனடாவும் இவ்வமைப்பில் தொடக்ககால உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. 1964இல் ஜப்பான் இவ்வமைப்பில் இணைந்தது.



OEEC சாசனம்

இன்று உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து முப்பத்தியேழு நாடுகள் ஐரோப்பியப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி நிறுவனத்தில் உறுப்பினர்களாக உள்ளன. அவைகளில் பெரும்பாலானவை வளர்ந்த நாடுகளாகும். அவை சுதந்திர சந்தைப் பொருளாதாரம் மற்றும் மக்களாட்சி ஆகிய கோட்பாடுகளில் உறுதிப்பாடு உடைய நாடுகளாகும். இவ்வமைப்பின் தலைமையகம் பாரிஸில் உள்ளது.

### ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கி

**ஐரோப்பிய மன்றம்**

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தனித்தன்மை வாய்ந்த முடிவுகளில் 'மேற்கு ஐரோப்பிய நாடுகளை ஒருங்கிணைப்பது' என்பதும் ஒன்றாகும். 1949 மே மாதத்தில் பத்து நாடுகள் லண்டனில் சந்தித்து ஐரோப்பிய மன்றம் (Council of Europe) எனும் அமைப்பை உருவாக்க கையொப்பமிட்டன. இவ்வமைப்பின் தலைமையிடம் ஸ்ட்ராஸ்பர்க்கில் அமைக்கப்பட்டது. உறுப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களைக் கொண்ட ஒரு குழுவையும் அந்நிய நாடுகளின் பாராளுமன்றங்களிலிருந்து தருவிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றையும் கொண்டதாக இவ்வமைப்பு நிறுவப்பட்டது.

### ஐரோப்பிய நிலக்கரி, எஃகு சமுதாயம் (ECSC)

பிரான்சின் வெளியுறவுத்துறை அமைச்சரான ராபர்ட் ஷுமன் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையே சமரசம் ஏற்பட்டால் அது இருநாடுகளுக்கும் நன்மை பயப்பதோடு ஐரோப்பாவின் போருக்குப்



12th_History_TM_Unit_15_V2.indd 294 2/4/2020 11:15:04 AM



ஷுமன்



கொன்ராட்

பிந்தைய புனரமைப்பிற்கும் நன்மையபக்கும் என உணர்ந்தார். 1950 மே 9இல் அவர் ஷுமன் திட்டம் என்றறியப்பட்ட ஒரு திட்டத்தை முன் வைத்தார். அத்திட்டத்தில் இரு நாடுகளின் நிலக்கரி மற்றும் எஃகு ஆகியவற்றின் கூட்டு உற்பத்தியை, நாடுகள் கடந்த வலுவான, உயர்மட்ட ஆணையம் எனும் கட்டமைப்பிற்குள் வைத்து நிர்வகிக்கப்பட வேண்டுமென முன்மொழிந்தார். துறைகள் பொருளாதார ஒருங்கிணைப்புக்கான இத்திட்டம் பரஸ்பர ஆர்வத்தை உருவாக்கி இரு நாடுகளையும் தானாகவே இணைத்தது. மேற்கு ஜெர்மனியின் அதிபரான கொன்ட்ராட் அடினவர் மேற்கத்திய நாடுகளோடு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான இத்திட்டத்தை வரவேற்றார்.



ECSC உறுப்பினர்கள்

1951 ஏப்ரல் 18இல் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, பெல்ஜியம் மற்றும் லக்சம்பர்க் ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்து பாரிஸில் உடன்படிக்கை ஒன்றிலும் கையெழுத்திட்டதால் ஐரோப்பிய நிலக்கரி, எஃகு சமுதாயம் (ECSC) உருவானது. இவ்வாறு ஆறு நாடுகளுக்கிடையே நிலக்கரி, இரும்பு, எஃகு ஆகியவற்றின் வணிகத்திலிருந்த அனைத்து வரிகளும் தடைகளும் நீக்கப்பட்டன. ஐரோப்பிய நிலக்கரி, எஃகு சமுதாயத்தின் உருவாக்கமே ஐரோப்பிய ஒருங்கிணைப்பை நோக்கி எடுத்துவைக்கப்பட்ட முதல் அடியாகும். பிரிட்டன் தனது நாட்டின் தொழிற்சாலைகளை நாட்டிற்கு வெளியேயுள்ள ஒரு ஆணையத்திடம் ஒப்படைக்க விரும்பாததால் இவ்வமைப்பில் இணைய மறுத்தது. முதல் ஐந்து ஆண்டு காலத்தில் எஃகு உற்பத்தி ஐம்பது விழுக்காடுகள் அதிகமானதே இவ்வமைப்பின் வெற்றிக்குச் சான்றாகும். இவ்வெற்றிகளால் அனைத்துப் பொருட்களையும் இதைப் போலவே உற்பத்தி செய்து மேலும் முன்னோக்கிச் செல்ல அந்நாடுகள் முடிவு செய்தன. சுங்க வரிகளையும் ஒதுக்கீடுகளையும் படிப்படியாக நீக்கிவிட்டால் சுதந்திரமான போட்டியும், பொதுச்சந்தையும் உருவாகுமென பெல்ஜியத்தின் வெளியுறவுத்துறை அமைச்சரான ஸ்பாக் கூறினார். ஐரோப்பிய நிலக்கரி எஃகு சமுதாய அமைப்பைச் சேர்ந்த ஆறு நாடுகள் ரோமில் மேற்கொண்ட உடன்படிக்கையின் மூலம் ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயம் (European Economic Community – EEC) அல்லது ஐரோப்பிய பொதுச் சந்தை (European Common Market – ECM) பிரஸ்ஸல்சை தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இங்கிலாந்து இதில் இணையவில்லை.

### ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் (EEC)



EEC அமர்வு

ஐரோப்பியப் பொருளாதார சமுதாயமானது, பொருட்கள், சேவைகள், மூலதனம், உழைப்பு ஆகியவை ஓரிடம்விட்டு வேறிடம் செல்வதற்கு இருந்த தடைகளைக் களைந்தது. சந்தைப் போட்டிகளைக் கட்டுப்படுத்தியப் பொதுக் கொள்கைகளையும் அல்லது தனியார் ஒப்பந்தங்களையும் இவ்வமைப்பு தடைசெய்தது. ஒரு பொது வேளாண் கொள்கையும் (Common Agricultural Policy – CAP) ஒரு பொது வெளிநாட்டு வணிகக் கொள்கையும் தோற்றுவிக்கப்பட்டன. இதற்குப் போட்டியாக பிரிட்டன், டென்மார்க், நார்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா மற்றும் போர்த்துகல் ஆகிய நாடுகள் அங்கம் வகித்த ஐரோப்பிய சுதந்திர வணிகச் சங்கம் (European Free Trade Association – EFTA) எனும் அமைப்பை இங்கிலாந்து 1960இல் உருவாக்கியது. பொதுவான பொருளாதாரக் கொள்கைகள் இல்லாமல் போனதாலும் இந்நாடுகளின் உள்விவகாரங்களில்



12th_History_TM_Unit_15_V2.indd 295 2/4/2020 11:15:04 AM

தலையீடு செய்யும் அதிகாரம் பெற்ற அமைப்புகள் இல்லை என்பதாலும் இவ்வமைப்பு தொடக்கம் முதல் வலிமை குன்றியதாகவே இருந்தது.

1961இல் இங்கிலாந்து ஐரோப்பியப் பொருளாதார சமுதாயத்தில் இணைவதற்கு முடிவு செய்தது. இங்கிலாந்தின் பொருளாதாரம் பலவீனமாக இருந்ததால் அதன் வருகையை பிரான்சின் குடியரசுத்தலைவர் சார்லஸ் டீ கோலே எதிர்த்தார். பின்னர் அவர் பதவி விலகியவுடன் இங்கிலாந்தின் பிரதமர் எட்வர்டு ஹீத் தனது திறமைமிக்க அரசியல் விவேகத்தின் மூலம் இவ்வமைப்பில் இணைவதற்கு வழி ஏற்படுத்தினார். 1973 ஜனவரி 1இல் அயர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளுடன் இங்கிலாந்தும் இவ்வமைப்பில் இணைந்தது.

### ஒற்றை ஐரோப்பியச் சட்டம் (SEA)

1987 ஜூலை 1இல் நடைமுறைக்கு வந்த ஒற்றை ஐரோப்பிய சட்டம் ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தினுடைய நோக்கத்தின் எல்லைகளை விரிவடையச் செய்தது. இது உறுப்பு நாடுகள் தங்களுக்கு இடையிலான அயலுறவுக் கொள்கையில் மேலும் தீவிரமாக ஒருங்கிணைந்து செயல்படவேண்டுமெனக் கூறியது. இச்சட்டத்தின்படி ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் அதன் மக்கட்தொகையின் அடிப்படையில் பல வாக்குகள் வழங்கப்பட்டன. ஒரு சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் மொத்த உறுப்பினர்களில் தோராயமாக மூன்றில் இரண்டு பகுதி உறுப்பினர்களின் வாக்குகள் தேவை. இப்புதிய செயல்முறை ஐரோப்பிய பாராளுமன்றத்தின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்தது. இது 1952 முதல் நடைமுறைக்கு வந்தது குறிப்பாக பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட மசோதாக்கள் அமைச்சர் குழுவின் ஒட்டுமொத்த ஒப்புதலைப் பெற்றால் சட்டமாக்கப்படலாம்.

### ஐரோப்பிய ஒன்றியம் (EU)

ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்றிணைந்து 1991 டிசம்பரில் மாஸ்ட்ரிக் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இதன் வாயிலாக 1993இல் ஒற்றைச் சந்தையுடன் ஐரோப்பிய ஒன்றியம் நிறுவப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியம் உருவாக்கப்பட்ட பின்னர் ஒன்றிய உறுப்பினர்கள் வெளியுறவுக் கொள்கை, உள்நாட்டுப் பாதுகாப்பு போன்ற ஏனைய துறைகளிலும் இணைந்து பணியாற்றினர். இவ்வுடன்படிக்கை ஒரே ஐரோப்பியப் பணமான யூரோ உருவாக்கப்படுவதற்கு வழிவகுத்தது. 2017இல்



ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடி – யூரோ நாணயம்

பிரிட்டன் இவ்வமைப்பிலிருந்து வெளியேறியது. (பிரிட்டனின் வெளியேற்றம்(exit), பிரெக்ஸிட் Brexit" என்றழைக்கப்படுகிறது. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் 28 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதன் தலைமையகம் பெல்ஜியம் நாட்டின் பிரஸ்ஸல்சில் அமைந்துள்ளது.

### பனிப்போரின் முடிவு

உலக அளவில் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் இரு துருவப் பன்னாட்டுக்கட்டமைப்பை உருவாக்கியிருந்தன. தொடக்கத்தில் சோவியத் யூனியனின் ராணுவத் திறன் வலிமை குன்றியதாகவேயிருந்தது. ஆனால் 1969வாக்கில் சோவியத் யூனியன், அணு ஆயுதத் திறனில் அமெரிக்காவுக்குச் சரிநிகரானது. பரஸ்பரம் உறுதி செய்யப்பட்ட அழிவு (Mutual Assured Destruction – MAD) என்பது இரு சக்திகளையுமே அச்சத்திற்குள்ளாக்கியது. மேலும் அணு ஆயுதப் போட்டி இரு நாடுகளுக்கும் மிகப்பெரும் செலவினத்தை ஏற்படுத்தியது. வரவு செலவுத் திட்டங்களில் பாதுகாப்பிற்கு ஒதுக்கப்படும் பெருமளவிலான நிதி ஒதுக்கீடு இரு நாடுகளுக்கும் இக்கட்டான பொருளாதார நிலைகளை ஏற்படுத்தியது. ஐரோப்பாவில் நடைபெற்ற வலுவான ஆயுதக் குறைப்பு இயக்கங்கள் ஆளுகிற அரசுகளுக்கு அழுத்தம் கொடுத்தன. இவை வல்லரசுகளை பேச்சுவார்த்தைக்கு இட்டுச் சென்றன.

1960களின் பிற்பகுதி முதல் 1970களின் பிற்பகுதி வரையிலான காலப்பகுதி மனக்கசப்பு நீங்கிய (தற்காலிகப் பகைமைத் தவிர்த்த காலம்) காலப்பகுதியென அறியப்பட்டது. இக்காலப் பகுதியில் அமெரிக்காவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்குமிடையே ஒத்துழைப்பு வணிகமும் அதிகரித்தது. போர்திறம் வாய்ந்த ஆயுதங்கள் கட்டுபாட்டுப் பேச்சுவார்த்தைகள் (Strategic Arms Limitation Talks SALT 1972 & 1979) போர்திறம் வாய்ந்த ஆயுதக் குறைப்பு உடன்படிக்கைகள் (Strategic Arms Reduction Treaties START, 1991)


12th_History_TM_Unit_15_V2.indd 296 2/4/2020 11:15:04 AM

ஆகியன ஒத்துழைப்பும், சகவாழ்வும் நிறைந்த காலத்தின் வருகையை முன்னறிப்புச் செய்தது.



அமெரிக்க உச்சி மாநாட்டில் கோர்பசேவ் உடன் ரொனால்டு ரீகன்

1985இல் மிகைல் கோர்பசேவ் சோவியத் ரஷ்யாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து சோவியத் யூனியனில் வியக்கத்தக்க அரசியல், சமூக மாற்றங்கள் ஏற்படலாயின. கோர்பசேவ் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதில் உறுதிப்பாட்டுடன் இருந்தார். 1986 பிப்ரவரியில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் அரசியல், பொருளாதார மறுகட்டமைப்பின் (பிரெஸ்த்ட்ரோகியா–Perestroika) அவசியம் குறித்து விளக்கியதோடு, ஒளிவுமறைவற்ற அல்லது வெளிப்படையான (கிளாஸ்நாஸ்ட்–glasnost) காலம் உருவாக வேண்டுமெனவும் கூறினார். பிரெஸ்த்ட்ரோகியாவின் மூலம் அவர் பல நிறுவனங்களின் மீதிருந்த மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்தினர். விவசாயிகளும், பொருள் உற்பத்தியாளர்களும், வணிகர்களும் எதை உற்பத்தி செய்வது, எவ்வளவு உற்பத்தி செய்வது எவ்வளவு விலை வைப்பது என்பதை அவர்களே முடிவு செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

சோவியத் யூனியனின் நிர்வாகக் கட்டமைப்பை ஜனநாயகப்படுத்துவதற்காக கோர்பசேவால் உருவாக்கப்பட்ட கோட்பாடே கிளாஸ்நாஸ்ட் என்பதாகும். சோவியத் யூனியனின் அரசியல் கட்டமைப்பில் பல அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்தன. கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரம் குறைக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் பதவிக்குப் பல வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தல் முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அரசு அலுவலர்கள் விமர்சனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டனர். செய்திகளை சுதந்திரமாகப் பரப்புவதற்கு கிளாஸ்நாஸ்ட் மூலம் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. மக்கள் தாங்கள் நினைத்ததை பேசும் சுதந்திரம் பெற்றனர். அரசுக்கு எதிரான செய்திகளைப் பேசினால் கைது செய்யப்படுவோமோ, நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவோமோ என மக்கள் கவலை கொள்ளத் தேவையில்லாமல் போயிற்று. இக்கோட்பாடுகள் சோவியத் யூனியனில் புரட்சிகர தாராளவாத அலைகளை உருவாக்கிய அதே சமயத்தில், அவையே சோவியத் யூனியனின் சிதைவுக்கும் காரணமாயிற்று.



போரிஸ் யெல்ட்சின்



ஜிம்மி கார்ட்டர்

பனிப்போர் காலகட்டத்தில் 1989ஆம் ஆண்டு ஒரு திருப்புமுனையாகும், அவ்வாண்டில் போலந்து நாட்டில் சதந்திரமாகத் தேர்தல்கள் நடைபெற்றன. அத்தேர்தலில் போலிஷ் ஒருமைப்பாட்டு இயக்கம் (Polish Solidarity Movement) எனும் கட்சி வெற்றி பெற்றது. கம்யூனிஸ்டுகள் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டனர். ஜூலை மாதத்தில் ஐரோப்பிய மன்றத்தில் உரை நிகழ்த்துகையில், கோர்பசேவ் தனக்கு முன்னர் அதிபராக இருந்த பிரஷ்னேவின் கோட்பாடுகளைத் தான் நிராகரிப்பதாகக் கூறினார். மேலும் "நட்பு நாடுகளோ, கூட்டு சேர்ந்திருக்கும் நாடுகளோ அல்லது எந்த நாடுகளாக இருந்தாலும் அந்நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவது அல்லது அவற்றின் இறையாண்மையைக் கட்டுப்படுத்த முயற்சிப்பது அனுமதிக்க முடியாது" என்றும் கூறினார். 1989 நவம்பரில் பனிப்போரின் மிகமுக்கியச் சின்னமாக விளங்கிய பெர்லின்சுவர் இடிக்கப்பட்டது. 1989 நவம்பர் மாதத்தின் இறுதிப் பகுதியில்மேற்கு ஜெர்மனியின்அதிபரான ஹெல்மட் கோல், நட்பு நாடுகளைக் கலந்தாலோசிக்காமலே திடீரென கிழக்கு ஜெர்மனியில் சுதந்திரமாகத் தேர்தல்கள் நடைபெறுவதற்கான பத்து அம்சத் திட்டத்தை அறிவித்தார். தொடர்ந்து ஜெர்மனியின் இணைப்புக்கும் அழைப்பு விடுத்தார். 1989இன் இறுதியில் கிழக்கு ஐரோப்பா முழுவதிலும் மக்கள் எழுச்சிகள் ஏற்பட்டன. பல்கேரியா தவிர்த்து ஏனைய கம்யூனிச நாடுகளின் தலைவர்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டனர். மெதுவாகக் கிழக்கு ஐரோப்பியநாடுகள் கம்யூனிசத்துடன் கொண்டிருந்த இணைப்பைத் துண்டித்துக் கொண்டன. இந்நிகழ்வுகளை அறிகுறியாக



12th_History_TM_Unit_15_V2.indd 297 2/4/2020 11:15:05 AM

எடுத்துக்கொண்ட சோவியத் குடியரசுகள் 1990இன் இடைப்பகுதியில் தங்களைச் சுதந்திர நாடுகளாக அறிவித்துக் கொண்டன. 1991டிசம்பர் 8இல் சோவியத் யூனியன் சிதைந்தது. டிசம்பர் 25இல் கோர்பசேவ் பதவி விலகினார். போரிஸ் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் குடியரசுத் தலைவரானார். சோவியத் யூனியனின் சிதைவோடு பனிப்போரும் ஒரு முடிவுக்கு வந்தது.

போரிஸ் யெல்ட்சின் (1931 – 2007) 1961இல் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்த இவர் 1968இல் கட்சியின் முழுநேர ஊழியரானார். எழுபதுகளில் பரவலாக அறியப்பட்டவரான இவர் கட்சியில் முக்கியப் பதவிகளை வகிக்கத் தொடங்கினார். கோர்பசேவ் பதவிக்கு வந்த பின்னர் அவர் மாஸ்கோ கட்சி அமைப்பிலுள்ள ஊழல்களைக் களைவதற்காக போரிஸ் யெல்ட்சினை (1985) தேர்ந்தெடுத்தார். 1986இல் யெல்ட்சின் பொலிட்பீரோவின் (சோவியத் யூனியனின் உயர்மட்ட கொள்கை முடிவு செய்யும் அமைப்பு) உறுப்பினராக உயர்த்தப்பட்டார். விரைவில் அவர் மாஸ்கோவின் மேயராக நியமிக்கப்பட்டார். கட்சி கூட்டங்கள் சீர்திருத்தப் பணிகள் மிக மெதுவாக நடைபெறுவதாக இவர் விமர்சனம் செய்ததால் கோர்பச்சேவின் எதிர்ப்பைச் சம்பாதித்தார். நிர்வாகம் ஜனநாயகப்படுத்தப்படவேண்டும், பொருளாதாரம் சீர்திருத்தப்படவேண்டும் எனும் கருத்துக்களை அவர் முன்வைத்ததால் சோவியத் வாக்காளர்களிடையே பிரபலமானார். 1989 மார்ச்சில் சோவியத் யூனியனின் புதிய பாராளுமன்றமான மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஒரு இடத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றார். ஓராண்டுக்குப் பின்னர், 1990 மே 29இல் கோர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் பாராளுமன்றம் யெல்ட்சினை ரஷ்ய குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இவரே சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் 1991இல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவரானார்.

## பாடச் சுருக்கம்

- இரண்டாம் உலகபோரின் பிந்தைய சூழலில், நிலைகுலைந்து போன மேற்கு ஐரோப்பியப் பொருளாதாரமும், வல்லரசுகளாக எழுச்சி பெற்றுக்கொண்டிருந்த அமெரிக்கா, சோவியத் ரஷ்யா ஆகியவற்றுடன் இரு–துருவ உலகம் உருவானதும் விளக்கப்பட்டுள்ளன.
- பொருளாதார உதவி, இராணுவ உடன்படிக்கைகள் ஆகியவற்றின் மூலம் தங்கள் மேலாதிக்கத்தை நிறுவப் போட்டியிட்டுக் கொண்டிருந்த வல்லரசுகளின் உத்திகள் விவாதிக்கப்பட்டுள்ளன.
- அமெரிக்காவின் மார்ஷல் திட்டம், அதற்குப் பதிலாக சோவியத் ரஷ்யாவின் மோலோடோவ் திட்டம், நேட்டோ உருவாக்கப்படுதல், அமெரிக்காவின் இவ்வெதிர்ப்புக்கு எதிர்வினையாக சோவியத் ரஷ்யா தனது நட்பு நாடுகளுடன் வார்சா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது ஆகியன அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.
- மூன்றாவது உலக நாடுகளும் அவைகளின் அணிசேரா இயக்கமும் விவரிக்கப்பட்டுள்ளன.
- ஐக்கிய நாடுகள் சபையும் உலகளாவிய பிரச்சனைகளை குறிப்பாக கொரியப் பிரச்சனை சூயஸ் கால்வாய் சிக்கல், அராபிய இஸ்ரேல் போர் ஆகியவற்றைத் தீர்த்து வைப்பதில் அதுவகித்த பங்கு ஆகியவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- ஐரோப்பிய ஒற்றுமையின் பரிணாம வளர்ச்சியின் உச்சமாக ஐரோப்பியப் பொருளாதார சமுதாயம் நிறுவப்பட்டதும் அது ஐரோப்பிய ஒன்றியமாக மாறிய வளர்ச்சிப் போக்கும் விவரிக்கப்பட்டுள்ளது.
- சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் பனிப்போர் முடிவுற்றது பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.


12th_History_TM_Unit_15_V2.indd 298 2/4/2020 11:15:05 AM

## பயிற்சி

C2M1Y6

### I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. 1947இன் இறுதியில் கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கிலிருந்து விடுபட்டிருந்த ஒரே நாடு ________
   (அ) கிழக்கு ஜெர்மனி
   (ஆ) செக்கோஸ்லோவாக்கியா
   (இ) கிரீஸ்
   (ஈ) துருக்கி

2. **கூற்று:** ஸ்டாலின் சர்ச்சிலை ஒரு போர் விரும்பி என விமர்சித்தார்.
   **காரணம்:** கம்யூனிசத்திற்கு எதிராக மேற்கு ஐரோப்பிய நாடுகள் கூட்டுசேர வேண்டுமென சர்ச்சில் முன்னதாக அழைப்பு விடுத்திருந்தார்.
   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   (ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (இ) கூற்று சரி. காரணம் தவறு.
   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

3. 'பனிப்போர்' எனும் சொல்லை உருவாக்கியவர்
   (அ) பெர்னாட் பரூச் (ஆ) ஜார்ஜ் ஆர்வெல்
   (இ) ஜார்ஜ் கென்னன் (ஈ) சர்ச்சில்

4. **கூற்று:** மார்ஷல் திட்டத்தை "டாலர் ஏகாதிபத்தியம்" என சோவியத் வெளியுறவுத் துறை அமைச்சர் இகழ்ந்தார்.
   **காரணம்:** சோவியத்தின் கண்ணோட்டத்தில் மார்ஷல் திட்டமென்பது அமெரிக்காவின் செல்வாக்கைப் பரப்புவதற்கான சூழ்ச்சியே ஆகும்.
   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   (ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (இ) கூற்று சரி. காரணம் தவறு.
   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

5. மார்ஷல் உதவித் திட்டத்தின் குறிக்கோள் ________
   (அ) ஐரோப்பியப் பொருளாதாரத்தை மறுகட்டுமானம் செய்வது
   (ஆ) முதலாளித்துவத் தொழில் முயற்சிகளைப் பாதுகாப்பது
   (இ) ஐரோப்பாவில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிறுவுவது
   (ஈ) சோவியத் ரஷ்யாவிற்கு எதிராக இராணுவக் கூட்டமைப்பை உருவாக்குவது

6. ட்ரூமன் கோட்பாடு ________ பரிந்துரைத்தது
   (அ) கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதற்கான நிதியுதவி
   (ஆ) காலனிகளிலுள்ள கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது
   (இ) கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவது
   (ஈ) அமெரிக்கத் தளபதியின் தலைமையின் கீழ் ஐ.நா சபைக்கு நிரந்தரப் படையை உருவாக்குவது

7. கீழ்க்காண்பனவற்றை காலவரிசைப்படி ஒழுங்கு செய்யவும்.
   1) வார்சா உடன்படிக்கை 2) சென்டோ
   3) சீட்டோ 4) நேட்டோ
   (அ) 4 2 3 1 (ஆ) 1 3 2 4
   (இ) 4 3 2 1 (ஈ) 1 2 3 4

8. ________ பாக்தாத் உடன்படிக்கையின் குறிக்கோளாக இருந்தது.
   (அ) மத்திய கிழக்கில் இங்கிலாந்தின் தலைமையைப் பாதுகாப்பது
   (ஆ) அப்பகுதி சார்ந்த எண்ணை வளங்களைச் சுரண்டுவது
   (இ) கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைத் தடுப்பது
   (ஈ) ஈராக் அரசை வலிமை குன்றச் செய்வது

9. லெபனானில் அமெரிக்கா தலையிட்டதை ________ எதிர்த்தது
   (அ) துருக்கி (ஆ) ஈராக்
   (இ) இந்தியா (ஈ) பாகிஸ்தான்

10. "மூன்றாம் உலகம்" எனும் பதத்தை உருவாக்கியவர் ________ஆவார்.
    (அ) ஆல்பிரட் சாவே (ஆ) மார்ஷல்
    (இ) மோலோடோவ் (ஈ) ஹாரி ட்ரூமன்

11. பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியானதைத் தேர்வு செய்க
    (அ) இந்தோனேசியா 1. ஜவகர்லால் நேரு
    (ஆ) எகிப்து 2. டிட்டோ
    (இ) கானா 3. குவாமி நுக்ருமா
    (ஈ) யுகோஸ்லோவியா 4. கமால் அப்துல் நாசர்
    (உ) இந்தியா 5. சுகர்னோ



12th_History_TM_Unit_15_V2.indd 299 2/4/2020 11:15:05 AM

| | அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|---|
| (அ) | 5 | 3 | 4 | 2 | 1 |
| (ஆ) | 1 | 3 | 2 | 4 | 5 |
| (இ) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (ஈ) | 1 | 2 | 3 | 4 | 5 |

12. அணிசேரா இயக்கத்தின் முதல் உச்சி மாநாடு ________ல் நடைபெற்றது
    (அ) பெல்கிரேடு (ஆ) பெய்ஜிங்
    (இ) பாண்டுங் (ஈ) பாலி

13. **கூற்று:** பன்னாட்டு சங்கம் ஒரு தோல்வி என்பதை இரண்டாம் உலகப்போர் நிரூபித்தது.
    **காரணம்:** மற்றொரு போர் ஏற்படாவண்ணம் தடுக்க ஒரு சக்திவாய்ந்த அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை தலைவர்கள் உணர்ந்தனர்.
    (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
    (ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
    (இ) கூற்று சரி. காரணம் தவறு.
    (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

14. ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24இல் ________ உருவானது.
    (அ) 100 உறுப்பினர்களுடன்
    (ஆ) 72 உறுப்பினர்களுடன்
    (இ) 51 உறுப்பினர்களுடன்
    (ஈ) 126 உறுப்பினர்களுடன்

15. பின்வரும் கூற்றுகளில் எக்கூற்றுகள் சரியானவை?
    கூற்று I: ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம் பனிப்போரின் தொடக்கத்துடன் ஒருங்கே நடைபெற்றது.
    கூற்று II: பனிப்போர் காலக்கட்டத்தில், போர்கள் நிகழாமல் தடுப்பதில் ஐ.நா சபை முக்கிய பங்காற்றியது.
    கூற்று III: பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்கள் தொடர்புடைய பிரச்சனைகளில் ஐ.நா சபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது.
    (அ) I,II (ஆ) II,III
    (இ) I, III (ஈ) மேற்கூறப்பட்ட அனைத்தும்

16. சூயஸ் கால்வாய் செங்கடலை ________ இணைக்கிறது.
    (அ) ஏடன் வளைகுடாவுடன்
    (ஆ) காம்பே வளைகுடாவுடன்
    (இ) மத்தியதரைக் கடலுடன்
    (ஈ) அரபிக் கடலுடன்

17. ஐ.நா சபையின் முதல் பொதுச் செயலாளர் டிரிக்வே லை ________ சேர்ந்தவராவார்.
    (அ) பர்மா (ஆ) ஜப்பான்
    (இ) சிங்கப்பூர் (ஈ) நார்வே

18. **கூற்று:** 2017இல் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியே செல்வதாக (Exit) அறிவித்தது.
    **காரணம்:** பிரிட்டனின் வெளியேற்றம் 'பிரெக்ஸிட்' (Brexit) என அழைக்கப்படுகிறது.
    (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
    (ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
    (இ) கூற்று சரி. காரணம் தவறு.
    (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

19. கிளாஸ்நாஸ்ட் குறிப்பது ________
    (அ) ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையை
    (ஆ) சோவியத் கம்யூனிச கட்சியை ஜனநாயகப்படுத்தப்படுவதை
    (இ) சோவியத் ஐக்கிய பாராளுமன்றம் மறுகட்டமைப்புச் செய்யப்படுவதை
    (ஈ) பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் புத்துயிர் அளிப்பதை

20. சோவியத் யூனியன் ________ இல் சிதறுண்டது.
    (அ) நவம்பர் 17, 1991 (ஆ) டிசம்பர் 8, 1991
    (இ) மே1, 1991 (ஈ) அக்டோபர் 17, 1991

## II. குறுகிய விடையளிக்கவும்

1. அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.
2. கம்யூனிசத்தைக் கட்டுக்குள் வைத்தல் எனும் கோட்பாட்டை விளக்குக.
3. ஐ.நா சபையில் நிறைவேற்றப்பட்ட "அமைதிக்காக இணைகிறோம்" எனும் தீர்மானத்தின் சிறப்பினைக் குறிப்பிடவும்
4. 'கோமிங்பார்ம்' குறித்து நீங்கள் அறிவதென்ன?
5. பனிப்போர் காலகட்டத்தைச் சேர்ந்த 'மறைமுக' போர்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
6. ஹங்கேரியச் சிக்கலின் பின்னணி யாது?
7. ஷூமன் திட்டம் என்றால் என்ன?
8. பிரெஸ்த்ட்ரோகியா கோட்பாட்டின் பொருட் சுருக்கத்தைக் கூறுக.


12th_History_TM_Unit_15_V2.indd 300 2/4/2020 11:15:05 AM

### III. சுருக்கமான விடையளிக்கவும்.

1. அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்பட்ட நேட்டோவுக்கான பதில் நடவடிக்கையே சோவியத் ரஷ்யாவின் வார்சா உடன்படிக்கை விளக்குக.
2. ஐ.நா சபையின் சாசனம் முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பல்வேறு கட்டங்கள் குறித்து எழுதுக.
3. நேட்டோ உருவாக்கப்பட்டதின் பின்னணியைக் கண்டறியவும்.
4. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக
5. நேட்டோவைப் போல ஏன் சீட்டோ (SEATO) பிரபலமடையவில்லை?

### IV. விரிவான விடையளிக்கவும்

1. அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும்.
2. அரபு–இஸ்ரேலிய முரண்பாட்டின் தோற்றத்தை விவாதிக்கவும். தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் எவ்வாறு இரு நாடுகளுக்கிடையே 1967இல் பெரும் போர் ஏற்படக் காரணமாயிற்று என்பதை விளக்கவும்.
3. "பாதுகாப்புக்கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்கள் தொடர்பு கொண்டுள்ள பிரச்சனைகளில் ஐ.நா சபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது "பனிப்போர் காலத்து அனுபவங்களின் வாயிலாக இக்கூற்றை விளக்கமாக எடுத்துரைக்கவும்.
4. போரிஸ் யெல்ட்சினின் அரசியல் வளர்ச்சியைக் குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் அவர் வகித்த பங்கின் மீது கவனம் குறித்து விவரிக்கவும்.

### V. செயல்பாடுகள்

1. ஐக்கிய நாடுகள் சபை தினத்தன்று (அக்டோபர் 24) மாணவர்களை ஒரு மாதிரி பொது சபை அமர்வை நடத்தச் செய்து இப்பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பிரச்சனை குறித்து விவாதம் நடத்தச் செய்யலாம்.
2. மாணவர்களை இரு அணிகளாகப் பிரித்து முதலாளித்துவத்தை ஆதரித்தும் எதிர்த்தும் பட்டிமன்ற நிகழ்ச்சி நடத்தலாம்.
3. ஐக்கிய நாடுகள் சபை 1948 டிசம்பர் 10இல் வெளியிட்ட மனித உரிமைப் பிரகடன சாசனத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆய்வு செய்யலாம்.

## மேற்கோள் நூல்கள்


- Dan Stone (ed.), *The Oxford Handbook of Post-War European History,* 2012.
- Norman Lowe, *Mastering Modern World History,* Palgrave Master Series, 2013.
- Peter Calvocoressi, *World Politics Since 1945,* Longman, 2008.
- Hans J. Morgenthau, *Politics among Nations: The Struggle for Power and Peace,* McGraw-Hill, 1993.
- Arjun Dev & Indira Arjun Dev, *History of the World,* Orient BlackSwan, 2009.
- *Encyclopaedia Britannica.*




12th_History_TM_Unit_15_V2.indd 301 2/4/2020 11:15:05 AM

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| போரை ஆதரிப்பவர் அல்லது மற்ற நாடுகள் மீது ஆதிக்கத்தை விரும்புபவர் | **warmonger** | a person who advocates war or aggression towards other countries |
| வசீகரம், வசப்படுதல், ஈர்த்தல் | **enticement** | attraction, temptation |
| அழித்தது, சூறையாடியது | **devastated** | destroyed, ruined |
| தகர்த்தது | **shattered** | exhausted, smashed |
| பேரழிவுமிக்க, பெருங்கேடு விளைவிக்கின்ற | **catastrophic** | disastrous, terrible, dreadful |
| இனப்படுகொலை | **genocide** | mass slaughter, indiscriminate killing |
| சரமாரிக் குண்டுவீச்சுத் தாக்குதல் | **bombardment** | a continuous attack with bombs, shells or other missiles |
| ஒற்றறிதல், வேவுபார்த்தல், ஒற்றர்களைக் கொண்டு எதிரியையோ அல்லது எதிரி நாட்டையோ நெருக்கமாய் கண்காணித்தல் | **espionage** | surveillance; the practice of using spies for close observation of an enemy or enemy country. |
| போரில் ஈடுபடா ராஜதந்திரம் | **brinkmanship** | the practice of trying to achieve an advantageous outcome by pushing a dangerous event to the brink of active conflict. |
| மாற்றாக, பதிலாள் | **surrogate** | substitute; represent on behalf of others |
| கிளர்ச்சி, ஆட்சியை எதிர்த்து கிளர்ந்தெழுதல் | **insurgency** | violent struggle of a group of people who refuse to accept their government's power |
| பெருங்குழப்பம், ஒழுங்கற்ற நிலை | **chaos** | complete disorder and confusion |
| வெடி | **detonate** | explode |
| முத்தரப்பு | **tripartite** | involving three parties or consisting of three parts |
| சூழ்ச்சி, நிலைமையைச் சாதகமாக்கிக் கொள்ள எடுக்கும் நடவடிக்கை | **ploy** | tactic or trick, action intended for turning a situation to one's own advantage |
| மக்கள்தொகை ஆய்வாளர் | **demographer** | a person who engages in population studies. |
| சமரச முயற்சி | **reconciliation** | the process of making two opposite sides agree |
| குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கிவை | **earmark** | keep for a particular purpose |
| மேலாதிக்கம் | **hegemony** | dominance, supremacy |



12th_History_TM_Unit_15_V2.indd 302 2/4/2020 11:15:05 AM

## இணையச் செயல்பாடு

# இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்

இந்த செயல்பாட்டின் மூலம் பனிப்போர் வரலாற்றை பற்றிய படத்தொகுப்புகளை அறிந்து கொள்ள முடியும்




**படிநிலைகள்**


படி – 1 : URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க

படி – 2 : திரையின் மேலே உள்ள மெனுவில் மொழியை மாற்றம் செய்யவும், பின்னர் தேடுபொறியில் "cold war" என்பதை தட்டச்சு செய்யவும்

படி –3 : பனிப்போர் பற்றிய நிகழ்வுகளை வரிசையாக காண திரையின் கீழே தோன்றும் காலக்கோட்டை நகர்த்தவும்



படி 1



படி 2



படி 3

**உரலி:** https://www.cvce.eu/en

QR GUIDE

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.



12th_History_TM_Unit_15_V2.indd 303 2/4/2020 11:15:08 AM

# காலக்கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

## இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் (1900–1950)

**1900**

1905 – வங்கப் பிரிவினை / சுதேசி இயக்கம்
1906 – முஸ்லீம் லீக்
1907 – சூரத் பிளவு
1909 – மிண்டோ – மார்லி சீர்திருத்தம்

**1910**

1911 – ஆஷ் படுகொலை
1915 – இந்து மகாசபையின் முதலாவது மாநாடு ஹரித்துவாரில் நடைபெறல்
1916 – தன்னாட்சி இயக்கம் / லக்னோ உடன்படிக்கை
1917 – சம்பரான் இயக்கம்
1919 – மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தம் / ரௌலட் சட்டம் / ஜாலியன் வாலாபாக் படுகொலை

**1920**

1920 – ஒத்துழையாமை இயக்கம்
1921 – மலபார் கலகம்
1922 – சௌரி சௌரா நிகழ்ச்சி

**1930**

1930 – தண்டி யாத்திரை
1931 – காந்தி – இர்வின் ஒப்பந்தம்
1932 – வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடு / பூனா ஒப்பந்தம்
1937 – மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை

**1940**

1940 – ஆகஸ்ட் கொடை / லாகூர் தீர்மானம்
1942 – கிரிப்ஸ் தூதுக்குழு / வெள்ளையனே வெளியேறு இயக்கம்
1945 –வேவல் திட்டம் / சிம்லா மாநாடு
1946 – அமைச்சரவைத் தூதுக்குழு / நேரடி நடவடிக்கை / இடைக்கால அரசாங்கம் / இராயல் இந்தியக் கடற்படையின் கலகம்
1947 – இந்தியா விடுதலை அடைதல்

**1950**

1950 – இந்தியா குடியரசு நாடாக மாறுதல்



12th_History_TM_Unit_Timeline_NEW.indd 304 2/4/2020 11:15:42 AM

# காலக்கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

## உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் (1900–1950)

1900

1910

1914 – முதலாம் உலகப் போர் தொடக்கம்

1916 – சோம் போர் / வெர்டூன் போர் / ஜட்லாந்து போர்

1917 – ரஷ்யப் புரட்சி / காம்ப்ராய் போர்

1918 – பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கை / முதல் உலகப் போர் முடிவு

1919 – பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

1920

1920 – பன்னாட்டு சங்கம் தோற்றம்

1928 – கெல்லாக்–பிரையாண்ட் உடன்படிக்கை

1929 – பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை

1930

1933 – ஆயுதக் குறைப்பு மாநாடு

1938 – மூனிச் ஒப்பந்தம்

1939 – நாஜி–சோவியத் (ஆக்கிரமிப்பு தவிர்ப்பு) ஒப்பந்தம் / இரண்டாம் உலகப் போர் தொடக்கம்

1940

1940 – டங்கிர்க் வெளியேற்றம்

1941 – பேர்ல் துறைமுக சம்பவம்

1942 –மிட்வே கடற்போர் / ஸ்டாலின்கிராட் போர்

1943 – எல் அலாமெய்ன் போர் / முசோலினியின் வீழ்ச்சி

1945 – இரண்டாம் உலகப் போர் முடிவு / ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்

1946 – பாரிஸ் அமைதி மாநாடு

1949 – சீனப் புரட்சி

1950



12th_History_TM_Unit_Timeline_NEW.indd 305 2/4/2020 11:15:42 AM

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு – வரலாறு
### பாடநூல் ஆசிரியர்கள் மற்றும் மேலாய்வாளர்கள் குழுவினர்

**பாடக்குழுத் தலைவர்**

**முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி**
பேராசிரியர்
சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை

**பாடக்குழு இணைத் தலைவர்**

**முனைவர் கா.அ. மணிக்குமார்**
மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**பாடநூல் ஆசிரியர்கள்**

**முனைவர் உகன் பூட்டியா**
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம்
அமராவதி, ஆந்திரப்பிரதேசம்

**முனைவர். மாவேந்தர் சிங்**
உதவிப் பேராசிரியர்
எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம்
அமராவதி, ஆந்திரப்பிரதேசம்

**K. அசோக்**
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
சென்னை கிறித்துவக் கல்லூரி
தாம்பரம், சென்னை

**S. சந்திரசேகர்**
மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை
பெங்களூர் பல்கலைக்கழகம், பெங்களூரு

**முனைவர். E.K. சாந்தா**
தனிநிலை ஆராய்ச்சியாளர்
சிக்கிம் பல்கலைக்கழக வளாகம், சிக்கிம்

**முனைவர் கா.அ. மணிக்குமார்**
மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**முனைவர். V. கிருஷ்ண ஆனந்த்**
இணைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
சிக்கிம் பல்கலைக்கழகம், சிக்கிம்

**முனைவர். கனகலதா முகுந்த்**
மேனாள் பேராசிரியர்
பொருளாதாரம் மற்றும் சமூக ஆய்வுகள் மையம்
ஐதராபாத்

**முனைவர் S. B. தர்சனா**
உதவி. பேராசிரியர்
தமிழக மத்திய பல்கலைக்கழகம்
திருவாரூர்.

**முனைவர். வெங்கட ராமானுஜம்**
இணைப் பேராசிரியர்
சென்னை கிறித்துவக் கல்லூரி, சென்னை

**பாட ஆய்வாளர்கள்**

**முனைவர் கோ. ஜெயக்குமார்**
இணைப் பேராசிரியர்
பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**முனைவர் அ. தென்னரசு**
இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர்
அரசு கலைக் கல்லூரி, சேலம்

**முனைவர் ஜெ. முருகன்**
உதவிப் பேராசிரியர்
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
ஆத்தூர், சேலம் மாவட்டம்

**முனைவர் தே. ச. சரவணன்**
துணை இயக்குநர்
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம், சென்னை

**பாட ஆலோசகர் மற்றும் வல்லுநர்**

**முனைவர் பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை

**சு. கோமதி மாணிக்கம்**
பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
பழைய பெருங்களத்தூர், சென்னை

**பெ. பாலமுருகன்**
முதுகலை ஆசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி
தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்

**வி. வேல்முருகன்**
பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
வெள்ளாளகுண்டம், சேலம் மாவட்டம்

**அ. ஜாபர் அலி,** முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
கீரிப்பட்டி, சேலம் மாவட்டம்

**க.வேலு,**
பட்டதாரி ஆசிரியர்
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
தலைவாசல், சேலம் மாவட்டம்

**சகோ. லூர்துமரியாள்,** முதுகலை ஆசிரியர்
புனித ஜோசப் மகளிர் மேல்நிலைப் பள்ளி
சூரமங்கலம், சேலம்

**க. கார்த்திகேயன்,** முதுகலை ஆசிரியர்
கே.ஏ. நாச்சியப்பா அரசு ஆண்கள்
மேல்நிலைப் பள்ளி, கொங்கணாபுரம், சேலம்

**ஜா. ஷகிலா,** முதுகலை ஆசிரியர்
பாத்திமா மகளிர் மேல்நிலைப் பள்ளி
ஓமலூர், சேலம் மாவட்டம்

**சி. பார்த்திபன்,** முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
சுக்கம்பட்டி, சேலம் மாவட்டம்

**வெ. உமாமகேஸ்வரி,** முதுகலை ஆசிரியர்
எம்.என்.எஸ். அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி
ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்

**க. சாரதா,** முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
அழகப்பம்பாளையம் புதூர், சேலம்

ர. **தனலட்சுமி,** முதுகலை ஆசிரியர்
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி
நங்கவள்ளி, சேலம் மாவட்டம்

**க. அய்யாதுரை,** முதுகலை ஆசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி
மேச்சேரி, சேலம் மாவட்டம்

**முனைவர் க.சுரேஷ்,** பட்டதாரி ஆசிரியர்
குமார ராஜா முத்தையா மேல்நிலைப் பள்ளி
அடையாறு, சென்னை

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில்
அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

**பாட ஒருங்கிணைப்பாளர்கள்**

**த. சீனிவாசன்,** முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
கிருஷ்ணகிரி

**பெ. சுரேஷ்,**
முதுகலை ஆசிரியர் (வரலாறு)
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி
ஆத்தூர், சேலம் மாவட்டம்

**தமிழாக்கம்**

**முனைவர் S. இரவிச்சந்திரன்**
இணைப் பேராசிரியர் (ஓய்வு)
ராஜுஸ் கல்லூரி, ராஜபாளையம், விருதுநகர்

**இரா. இராஜ்குமார் பாலசுப்பிரமணியன்**
நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளர் (தமிழ்), புதுதில்லி

**வினோத் வின்செண்ட் ராஜேஷ்,** உதவிப் பேராசிரியர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக
உறுப்புக் கல்லூரி, திருநெல்வேலி

**முனைவர் க. மா. வேணுகோபால்**
மொழிபெயர்ப்பாளர்
பத்திரிகை தகவல் தொடர்பு அலுவலகம், சென்னை

**முனைவர் தே. ச. சரவணன்,** துணை இயக்குநர்
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
சென்னை

**ICT ஒருங்கிணைப்பாளர்**

**து. நாகராஜ்**
அரசு மேல்நிலைப் பள்ளி
ராப்பூசல், புதுக்கோட்டை மாவட்டம்

**விரைவுக் குறியீடு மேலாண்மைக்குழு**

**இரா. ஜெகநாதன்**
**சூ. ஆல்பர்ட் வளவன் பாபு**
**ம. முருகேசன்**
**வ. பத்மாவதி**
**ஆ. தேவி ஜெசிந்தா**

**தட்டச்சர்**

**இரா. மோகனாம்பாள்**
வேளச்சேரி, சென்னை

**கலை மற்றும் வடிவமைப்பு குழு**

**ஓவியம்**
**V. வினோத் குமார்**
**N. R. யுவராஜ்**
**பக்கிரிசாமி அண்ணாதுரை**

**பக்க வடிவமைப்பாளர்கள்**
**காமாட்சி பாலன் ஆறுமுகம்**
**ச. அசோக் குமார்**
**ர. பாலசுப்ரமணி**
**மா. செல்வக்குமார்**
**கோபிநாத் ரகுபதி**

**அட்டை வடிவமைப்பு**
**கதிர் ஆறுமுகம்**

**தரக்கட்டுப்பாடு**
**ராஜேஷ் தங்கப்பன்**
**ஜெரால்டு வில்சன்**
**அருண் காமராஜ் பழனிசாமி**

**ஒருங்கிணைப்பு**
**ரமேஷ் முனிசாமி**



12th_Author_page_Format_2.indd 306 2/4/2020 10:48:04 AM

# குறிப்புகள்



12th_Author_page_Format_2.indd 307
2/4/2020 10:48:04 AM

# குறிப்புகள்



12th_Author_page_Format_2.indd 308 2/4/2020 10:48:04 AM